



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்டல்மண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் பிற ஆக்கங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | பஞ்சாமிர்தம் | சிறுவர் நாடகங்கள் | 2015 |
| 2. | சட்டத்தின் திறப்பு விழா | வானொலி நாடகங்கள் | 2016 |
| 3. | பஞ்சாயுதம் | நாடகங்கள் | 2017 |
| 4. | மனவைரம் | வானொலி நாடகங்கள் | 2018 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வண்டல் மண்'

( பல்லூடக தொடர்புச்சாதனங்களில் படித்ததில் பிடித்த
சிறுவர் உள்ளங்களைச் சிறப்பாகப் பண்படுத்தும்
சிந்தனைமிக்க சிறுவர் நீதிக்கதைகள் )

ஆசிரியர்

'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘வண்டல் மண்’
(சிறுவர்களுக்கான நீதிக்கதைகள்)
(c) மறவன்புலோ செல்லம் அம்பலவாணர்
முதற்பதிப்பு :2018
ISBN978-955-42626-5-2

தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்ட வெளியீட்டு பட்டியல் தரவு

அம்பலவாணர், செல்லம் மறவன்புலோ
வண்டல்மண்/மறவன்புலோ செல்லம் அம்பலவாணர்
கொழும்பு, ஆசிரியர், 2018. -
ப. XIV, 106, செமீ 21
ISBN978-955-42626-5-2


i. 894.8113 டிவி 23 ii. தலைப்பு
1. சிறுவர் இலக்கியம்

பதிப்பாசிரியர்: செ.அம்பலவாணர்
478/28, அளுத்மாவத்தை வீதி,
கொழும்பு-15

0714280809

அச்சுப்பதிப்பு: J.K.பிறின்ரேர்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறவன்புலோ சாலவயற்கரை ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய பிரதம சிவாசாரியார் பிரம்மஸ்ரீ க. தியாகராஜசர்மா அவர்களின்

## ஆசியுரை

நமோ வ்ராத பதயே நமோ கணபதயே நம,
ப்ரமதே பதயே, நமஸ்தே அஸ்துலம் போதராய
ஏகதந்தாய விக்ன நாசினே
சிவ சுதாய வரதமூர்த்தயே நமோநம..



எல்லாம்வல்ல மறவன்புலோ சால வயற்கரை ஸ்ரீவீரகத்தி விநாயகர் தாழ்பணிந்து மறவன்புலோவைப் பூர்வீகமாகக்கொண்டு தற்போது திருமணம் முடித்து, தொழிலின் நிமித்தம் கொழும்பில் வசித்து வருகின்ற செல்லம் அம்பலவாணர் அவர்களின் வண்டல்மண் என்ற சிறுவர்களுக்கான சிறுகதைத் தொகுப்பிற்கு ஆசியுரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவரது தந்தையார், வண்ணாத்திக்குளம் பிள்ளையார் என அழைக்கப்படும் சாலவயற்கரை ஸ்ரீவீரகத்தி விநாயகர் மற்றும் அம்பலத்தாடி வைரவர் ஆகிய கோவில்களில் மிகவும் ஐக்கியமாக கோவிற்பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்கள். இக்கோவிலுக்குரிய உபயங்களை பரம்பரை பரம்பரையாகச் செய்து வந்தவர்கள்.. வருபவர்கள். திருவெம்பாவை, பிள்ளையார்கதை போன்ற காலங்களில் புராணங்கள் படித்து பயன்சொல்லுவதில் பக்தி சிரத்தையுடன் பங்குகொள்ளுபவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர்.

அவரது பிள்ளைகள் அனைவரும் தாமும் தந்தைக்கு எதுவிதத்திலும் சளைத்தவர்களல்லர், அதே பரம்பரையில் வந்தவர்கள் என்பதை இன்று சிறப்பாக பலதுறைகளிலும் நிரூபித்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலதெய்வமாம் அம்பலத்தாடி வைரவர் அருளினால் கிடைத்த புதல்வனுக்கு அம்பலவாணர் எனப் பெயரிட்டு, வல்லிபுர ஆழ்வார் கிருபையினாலே புலால்வெறுத்தவராக தனது மகனை வளர்த்து, சிறுபராயத்திலேயே சமய நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி மகிழ்ந்த தந்தையாரின் எண்ணங்களை தொழிலின் நிமித்தம் கொழும்பு சென்றபோதும் அங்கே பொறியியலாளராகத் தொழில்புரியும் அதேவேளை தனது தொழிலுடன் இறை தொண்டுகளாக பொன்னம்பலவாணேஸ்வரர் சிவன்கோவில் உட்பட்ட பல கோவில்களில் பன்னிருதிருமுறை முற்றோதல், புராணபடனம் போன்ற கைங்கரியங்களில் தன்னை பக்திசிரத்தையுடன் ஈடுபடுத்தியும், அதற்கேற்ற பயிற்சிகளை கொழும்பு திருவாவடுதுறை ஆதீனபயிற்சிமையத்தில் சிறப்பாகப் பெற்று 'திருமுறைநெறிச் செல்வர்' பட்டத்தினையும் பெற்று, கொழும்பு விவேகானந்த சபையில் சமயச் செயலாளராகவும், சமாதான நீதவானாகவும் இருப்பது மகிழ்வைத் தருகின்றது.

இன்னொருபுறத்தில் ஒரு பன்முகம் கொண்ட கலைஞனாக விளங்குவதையும் அறிந்தபோது இன்னும் இரட்டிப்பு மகிழ்ச்சியைத்தருகின்றது.

நாட்டில் நடந்த யுத்தம் சாலவயற்கரை வீரகத்தி விநாயகரையும் விட்டுவைக்கவில்லை. சமாதான நிலைமைதோன்றி கோவில் புனருத்தாரணம் செய்து 2012ல் கும்பாபிடேக நிகழ்வு நடைபெற்றபோது கோவிலுக்கேயுரித்தான ஏறத்தாழ 50வருட பழைமைவாய்ந்த பதிகங்களை தேடிப்பெற்று மீள அச்சுப்பதிப்பித்து வெளியிட்டபோது இவரது ஊரின் மீதான பற்றுதலை, என்னால் தெளிவாகப் புரிய முடிந்தது.

தான்பிறந்த, மடிதவழ்ந்த, வளர்ந்த, மறவன்புலோ மண்ணிற்காய் சமர்ப்பிக்கும் 'வண்டல்மண்' என்ற இந்த சிறுவர் நூலிற்கும் ஆசிரியர் அம்பலவாணருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் என்றென்றும் எம்பெருமான் ஆசிகள் கிடைக்க வேண்டுமென வேண்டி, ஓய்வின் பின்னர் இறைதொண்டிலும், கலைத்தொண்டிலும் மேன்மேலும் விரிவான சேவைபுரிய விநாயகப் பெருமான் திருவருள் கிடைத்து நோய் நொடியின்றி நீடூழி வாழ எம்பெருமானை வேண்டுகின்றேன்.

பிரம்மஸ்ரீ க. தியாகராஜசர்மா

19.12.2018

நாவற்குழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு தமிழ்ச்சங்க நிருவாகக்குழு உறுப்பினர் சைவமங்கையர் வித்தியாலய ஆசிரியை திருமதி.வளர்மதி சுமாதரன்[BA(Hons) Dip. In. Ed] வழங்கிய

# அணிந்துரை

'அரம் போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பில்லாதவர்' (திருக்குறள்)



அரத்தின் கூர்மை போலும் மதிநுட்பம் உடையவராக இருந்தாலும் நன்மக்களுக்கு இருக்கவேண்டிய நற்பண்புகள் இல்லாதவர் நெடிது நிற்கும் மரத்திற்குச் சமானமானவர் என்கிறார் வள்ளுவர். மக்கட் பண்பில்லாதவனை மனிதன் என்று கூறமுடியாது.

விஞ்ஞானமும், அதன் பரிணாமமும் கொடிகட்டிப் பறக்கின்ற இன்றைய அவசர உலகிலே, வாழ்வியல் முறைகள் சீர்கெட்டுப் போகின்ற சூழ்நிலையில் எதிர்கால இளைய சமுதாயம் நன்நெறிப் படுத்தப்பட வேண்டும் என சமூக ஆர்வலர்கள், சமயப் பெரியார்கள், நலன்விரும்பிகள் போன்றோர் ஆதங்கப் படுகின்றார்கள்.

இவ்வாறு ஆதங்கப்படுபவர்களில் ஒருவராக தொலைத் தொடர்புப் பொறியியலாளரான மறவன்புலோ செல்லம் அம்பலவாணர் அவர்கள் 'வண்டல்மண்' என்ற இந்தப் படைப்பின் மூலம் தன்னை அடையாளப்படுத்தி, இதன்மூலம் இன்றைய இளைய சமுதாயத்திற்கு அவசியமான சில செய்திகளை தொகுத்தளித்திருக்கிறார். முதலில் அவரை வாழ்த்துவதில் நான் பெருமகிழ்வு அடைகின்றேன்.

பன்முக ஆளுமையைக்கொண்ட இவர் ஒரு பொறியியலாளராக மட்டுமன்றி கலைஞனாக, எழுத்தாளனாக, நாடக நடிகனாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சாளனாக, சமயத்தொண்டுகளில் குறிப்பாக புராணபடனம் செய்தல் திருமுறைமுற்றோதல் போன்ற சமயசெயற்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு சமய நிறுவனங்களின் வளர்ச்சியிலும் ஏதோ ஒரு வகையில் தனது பங்களிப்பை நல்கிவருவதும் குறிப்பிடத்தக்கது.

மண்மறவாத மைந்தன், மறவன்புலோ பெற்றெடுத்த மண்ணின் மைந்தன் 'வண்டல்மண்' என்ற கதைத்தொகுப்பினுள் பத்திரிகைகள், மின்னஞ்சல், இணையம் பத்திரிகைகள், சமூகவலைத்தளங்கள் போன்ற பல்லூடகங்களின் வாயிலாகப் பெற்றுக்கொண்டவைகளைத் தொகுத்து வருங்கால சமுதாயத்தின் கைகளில் தவழவிட்டிருக்கிறார்.

ஒரு சமூகத்தின் அச்சாணி போன்றவர்கள் இளம் தலைமுறையினர். இளஞ்சிறார்கள் நாளைய தலைவர்கள், இளஞ்சிறார்கள் நல்வழிப்படுத்தப்பட வேண்டியவர்கள். சலவைசெய்து வந்த வெள்ளைத்துணியை எந்தச்சாயத்தில் வேண்டுமானாலும் தோய்க்கலாம். அது நாம் தோய்க்கும் நிறத்தை எடுத்துக் கொள்ளும். அதேவிதத்தில்தான் நாம் கொடுக்கின்ற பாவனையை மனதும் எடுத்துக் கொள்ளுகின்றது என்கிறார் பகவான் இராமகிருஷ்ணர். குழந்தைகளின் உள்ளமும் சலவை செய்து வந்த வெள்ளைத் துணியைப் போன்றதே. இளமையில் எத்தகைய கருத்துக்களை அவர்களுக்கு ஊட்டுகின்றோமோ அதற்கேற்ப அவர்களது பண்பும் உருவெடுக்கின்றது. பலமகான்களுடைய வாழ்க்கை வரலாறுகள் இந்த உண்மைக்குச் சான்றுபகர்கின்றன.

சிறார்களை உளஆரோக்கியமுள்ள பிரசைகளாக வளர்த்தெடுக்க பல்வேறு வழிமுறைகள் காணப்படுகின்றன. இசைப்பாடல்கள், ஓவியம், விளையாட்டுக்கள், கதை சொல்லுதல், கதைகேட்டல், சுதந்திரமான அன்பு உரையாடல்கள் போன்றவற்றுக்கு முக்கியமளிக்க வேண்டும். கதை சொல்லுதலும், கதைகேட்டலும் மாமனிதர்களோடு நமக்குள்ள உறவையும் வலுப்படுத்துகின்றது. பகவான் இராமகிருஷ்ணரும் தன் உபதேசங்களுக்கு முக்கியமான ஊடகமாக குட்டிக் கதைகளையே தேர்ந்தெடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிக்கதைகள் கூறுதல் என்பது பண்டைக்காலத்தில் இருந்தே மக்களை வழிப்படுத்த உருவாக்கப்பட்ட ஒன்றாகும். ஒன்றைச் செய் எனக்கட்டளை இடுவதை விட அதைப்பின்பற்றியோர் அடைந்த மேன்மைகளைக் கூறுவது சிறந்த பயனைத்தரும்.

சுவாமி விவேகானந்தரின் ஆன்மீகக் கல்வியும், லௌகீகக் கல்வியும் தாய் புவனேஸ்வரியின் மடியில்தான் ஆரம்பமாகின.

"இன்பமெனச் சில கதைகள்— எனக்
கேற்றமென்றும் வெற்றியென்றும் சில கதைகள்
துன்பமெனச் சில கதைகள் – கெட்ட
தோல்வியென்றும் வீழ்ச்சியென்றும் சில கதைகள்
என்பருவம் என்றன் விருப்பம் – எனும்
இவற்றுக்கிணங்க என் உள்ளம் அறிந்தே
அன்போடவள் சொல்லி வருவாள்— அதில்
அற்புதமுண்டாய்ப் பரவசமடைவேன்"

என்று கண்ணனாகிய தாய் தனக்கு கதைகள் பல கூறியதாய் பாரதியார் பாடியிருக்கிறார். இதேபோலத்தான் நரேனின் போக்கறிந்து கதைகள்சொல்லி அவற்றின்மூலம் அவனுக்கு கல்விபுகட்டியவள் தாய் புவனேஸ்வரி. இந்தக்கதைகள் நரேனின் இதயத்திலே கலந்து அவரின் பண்புடன் இரண்டறக்கலந்து விட்டது. தான் அடைந்த பல உயர்வுகளுக்கும் தன் தாயே காரணம் என்றும், தன் தாய்க்குத் தான் பெரும் கடமைப்பட்டுள்ளதாகவும் பின்னாளில் சுவாமி விவேகானந்தரும் கூறியுள்ளார்.

அவ்வகையில் பல்லூடகங்களில் இருந்து தற்கால சமூகம் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினையை மையப்படுத்தியதாக முப்பத்து மூன்றுகதைகளைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்து, அவை சமூகத்திற்கு கூறவிளைகின்ற தத்துவத்தினைச் சுட்டிக்காட்டி, அத்தத்துவத்திற்கு ஓரளவு பொருந்திவரக்கூடிய, ஏற்ற திருக்குறள் ஒன்றினைப் பொருளுடன் இணைத்து முழுமையாக்கியுள்ளார்.

இவை ஒவ்வொன்றும் சிறுவர்கள் மட்டுமல்ல ஒவ்வொரு பெற்றோரும், ஏன் ஒவ்வொரு மனிதனும் அவசியம் அறிந்திருக்க வேண்டிய மையக்கருத்துக்களை வெளிக்கொணர்ந்திருக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மை, தந்தையின் பொறுப்புணர்வும் கண்டிப்புடனான பாசமும், பெற்றோர் பிள்ளைகள் உறவு, சிறுவர்களின் உளப்பாங்கு, மகிழ்வான வாழ்விற்கான வழி போன்றவற்றைக் கருவாகக்கொண்ட கதைகளைத் தேர்ந்தெடுத்து, இலகுவாகப் புரியக்கூடிய எளிய மொழிநடையில் தந்திருப்பது சிறப்பாக அமைந்திருக்கின்றது.

இவை ஒரு தேடலின் தொகுப்பாக அமைந்தமையால் தனித்தனியே ஒவ்வொன்றாக எடுத்துக் கூறாது முத்தாய்ப்பாக சிலவற்றைச் சொல்லுகின்றேன். 'ஆசை' என்கின்ற கதை எல்லோராலும் வாசிக்கப்பட வேண்டிய ஒன்று. சமகாலத்தில் எமது சமுதாயம் கண்கூடாகக் காணுகின்ற முக்கிய பிரச்சனையை முன்வைத்த ஒன்றாகக் காணப்படுகின்றது. அதேபோன்று 'சகிப்பு' என்ற சிறுகதை வாழ்க்கை என்ற நாணயத்தின் இருபக்கத்தையும் எடுத்துக்காட்டி சிறார்களுக்கு மட்டுமல்ல எமக்கும் படிப்பினையைப் புகட்டி நிற்கின்றது.

அதேபோன்று இணையத்தில் பகிரப்பட்டிருந்தாலும் 'பெற்றோர்' சிறுகதையின் கீழ் தரப்பட்டிருக்கும் 'முதியோர் இல்லத்துக்கு பணம்கொடு, பொருள்கொடு, உணவுகொடு, உடைகொடு, உன் பெற்றோரை மட்டும் கொடுத்து விடாதே' என்ற கவிதைக் குறிப்பு இதயத்தைத் தொடுகின்றது. காலத்தின் தேவை.

பூந்தோட்டத்தில் பலமலர்கள் மலரலாம். ஆனால் மாலையாகக் கட்டுவதற்கு இறைஆராதனைக்குப் பயன்படும் மலர்களையே மாலையாக்குகிறார்கள். அதேபோன்று தான் பல செய்திகள் கதைகள் ஊடகங்களில் வெளிவந்தாலும் உள்ளங்களில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய கதைகளை விதைகளாக எடுத்து நூலாசிரியர் தனது 'வண்டல் மண்' ணில் புதைத்திருக்கின்றார். நிச்சயம் அது நல்ல அறுவடையைத் தரும். அவரது முயற்சிகள் செயற்பாடுகள் தொடர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து நிற்கிறேன்.


திருமதி வளர்மதி சுதாகரன்
மாதங்கஹறவத்தை ஒழுங்கை,
கொழும்பு 06

22.12.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை...



தொலைத்தொடர்புத் துறையில் ஏறத்தாழ முப்பத்தெட்டு வருடங்கள் பல்வேறு பகுதிகளில், பதவி நிலைகளில் கடமையாற்றி ஓய்வு நிலையை நெருங்கியுள்ள இத்தருணத்தில், பல்லூடகங்களில் படித்து, பார்த்து, ரசித்தவற்றில் எனக்குப்பிடித்த, சிறுவர்பராயத்தினருக்கு உகந்தவையாய், படிப்பினையாய் அமையும் என்று எண்ணிய முப்பத்துமூன்று சிறுகதைகளினைத் தொகுத்து, 'வண்டல்மண்' எனப்பெயரிட் டு நான் பிறந்து வளர்ந்த, ஆரம்பக் கல்வியைத்தந்து எனது பிஞ்சுப் பாதங்களைச் சுமந்த எனது தாய்மண்ணாம் 'மறவன்புலோ' விற்கு சமர்ப்பணம் செய்கின்றேன்.

வண்டல்மண்தான் பயிர்கள் செழித்து வளர உகந்த சிறந்த மண்ணாகும். சிறுவர்களுக்கான இலக்கியங்கள் அவர்களின் வாழ்க்கை செழிக்க, அறிவுவிருத்தியடைய, தேடல்பரந்துசெல்ல வண்டல்மண் போல் மிருதுவாக, உரமாக, இலகுவாக ஊடுருவிச்செல்லத்தக்கதாக, செழிப்பாக, இதமானதாக, வளமானதாக இருக்கவேண்டும் என்பதால் **'வண்டல்மண்'** என்ற பெயரிட்டு உங்கள் கைகளில் தவழவிடுகின்றேன்.

இதில் அடங்கியுள்ள கதைகள், குறிப்புக் கவிதைகள் ஆகியன குரல்வழித் தொடர்பாடல், பத்திரிகைகள், மின்னஞ்சல், இணையம், வீடியோப்பதிவுகள், சமூக வலைத்தளங்கள் போன்ற பல்லூடகங்களிலிருந்து (Multi media) பெற்றுக் கொள்ளப்பட்டவை. எனது மொழிநடையில் உகந்த மாற்றங்களைப் புகுத்தித் தரப்பட்டுள்ளன. கதையையோ தலைப்பையோ ஓரளவுக்காவது சுட்டிநிற்கும் திருக்குறள் திரு மு.வரதராசன் அவர்களின் உரையுடன் தரப்பட்டுள்ளது.

வரலாற்றுத் தடங்களுடன் அமைந்துள்ள 'மறவன்புலோ' கிராமமானது பண்பாட்டின் உறைவிடம். தொன்மையான கிராமிய வழிபாட்டின் இருப்பிடம். தென்மராட்சியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்பெட்டகம். முன்னொரு காலத்தில் மொட்டைக்கறுப்பன் நெல்லுக்குப் பெயர்போன கிராமம். நெல், பனை, தென்னை, சிறுகடல், ஏராளமான குளங்கள், நீர்நிலைகள் மற்றும் பால்சுரக்கும் கால்நடைகள், போன்ற வளங்களைத் தன்னகத்தே கொண்டு, சிறு(குல)தெய்வங்களின் அருட்கடாட்சத்தைப் பெற்றதால் பஞ்சம், பசி, பட்டினி என்ற வார்த்தைகள் அருகிநிற்கும் மருதம் மற்றும் நெய்தல் தன்மைகளை ஒருங்கே கொண்ட கிராமம். பல்வேறு சமூகத்தினரையும் ஒருங்கே அரவணைத்து அழகுபார்க்கும் மனிதம் நிறைந்த மண்.

ஐப்பசி சரஸ்வதிபூசை முதல், மாசி சிவராத்திரி வரையான ஆறுமாதம் பச்சைக் கம்பளமாகவும் மிகுதி ஆறுமாதமும் வரண்டபூமியாகவும் காட்சியளிக்கும் எனது கிராமத்தின் இவ்வருடக் கார்த்திகைமாத மருதநிலக்காட்சி பின்புற அட்டையிலும், நெய்தல்நிலக்காட்சி சமர்ப்பணப் பக்கத்திலும் இடம்பெற்று சிறப்பிக்கின்றது. அதேபோன்று பல்லூடகத்தில் பெறப்பட்ட கதைகள் என்பதனால் பல்லூடகத்தின் அதாவது தொடர்பாடல் துறையின் ஆரம்பப்படிநிலையை குறித்துநிற்கும் 'இணைக்கும் இணைப்பு (Tie line)' என்பதனை விளக்கும் எனது சிறுவர் பராயத்தில் விளையாட்டுச் சாதனமாக இருந்த, சிறுவர்கள் தொடர்பாடல் நிகழ்த்துவதனை விளக்கும் படம் முன் அட்டையிலும் இடம்பெற்றிருக்கின்றது.(நானும் இதே தொலைத்தொடர்புத் துறையில் பொறியியலாளராகவும் இருப்பதுவும் ஒரு காரணம் எனக் கொள்ளலாம்)

இதனைத் தொகுத்து வெளியிடுவதில் எனக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து பக்கபலமாக இருந்த, தம் பங்களிப்பினை நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு நான்பிறந்த மண்ணிற்குச் சமர்ப்பணமான நூலான 'வண்டல்மண்'ணினை உங்கள் கரங்களில் தவழவிடுகின்றேன்.

அன்பின் அம்பலம்


கலையாபரணன் கோட்டைவீதி
மறவன்புலோ மேற்கு
சாவகச்சேரி
22.12.2018

இல 478/28,
அளுத்மாவத்தை வீதி
கொழும்பு -15
0714280809




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | அம்மா | ..03 |
| 2. | கண்டிப்பு | ..07 |
| 3. | பெற்றோர் | ..12 |
| 4. | ஆசை | ..17 |
| 5. | பாசம் | ..20 |
| 6. | கட்டுப்பாடு | ..22 |
| 7. | எண்ணம் | ..25 |
| 8. | பக்தி | ..27 |
| 9. | சோதனை | ..31 |
| 10. | விலை | ..34 |
| 11. | கல்லும் மண்ணும் | ..36 |
| 12. | பணக்காரன் | ..38 |
| 13. | பாராட்டு | ..41 |
| 14. | பொறுப்பு | ..45 |
| 15. | மேதாவி | ..48 |
| 16. | உள்மனது | ..50 |
| 17. | மதிப்பு | ..53 |
| 18. | தீர்மானம் | ..55 |
| 19. | வாழ்க்கை | ..57 |
| 20. | தலைக்கனம் | ..60 |
| 21. | மனம் | ..63 |
| 22. | தீர்ப்பு | ..66 |
| 23. | உண்மை | ..68 |
| 24. | சமயோசிதம் | ..70 |
| 25. | நேர்மை | ..73 |
| 26. | சகிப்பு | ..77 |
| 27. | பொருள் | ..83 |
| 28. | புகழ் | ..86 |
| 29. | அறிவு | ..89 |
| 30. | படிப்பினை | ..92 |
| 31. | சந்தர்ப்பம் | ..96 |
| 32. | நிம்மதி | ..99 |
| 33. | விமர்சனம் | ..102 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. அம்மா



மறுபிறவி இருந்தால்
நான் செருப்பாகப்
பிறக்க வேண்டும்..
என் அம்மா காலில் மிதிபட அல்ல..
என்னைச் சுமந்த அவளை
ஒருமுறை நான் சுமப்பதற்காக .. ..

**கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு**
**என்ஆற்றுங் கொல்லோ உலகு.** *(ஒப்புரவறிதல்-211)*



[பிறர்க்கு உதவுவது, அவ்வுதவியைப் பெற்றவர் திரும்பச் செய்வதை எதிர்பார்த்துஅன்று. ஒருவர் செய்ததற்குத் திரும்பச் செய்துதான் ஆகவேண்டும் என்றால் மழைதரும் மேகங்களுக்கு இந்த உலகம் திரும்ப என்னசெய்துவிடமுடியும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

தனது வாழ்க்கையின் மிக உயர்ந்த நிலைக்குச் சென்று விட்ட ஒருவன் தனது தாயைப் பார்த்துக் கேட்டான். அம்மா! என்னைப் பெற்றெடுத்து, பாசத்தைக் கொட்டி, பல தியாகங்களைச் செய்து, காலமெல்லாம் என்மீது பாசத்தைப் பொழிந்து ஆளாக்கிய உனக்கு ஏதாவது செய்ய வேண்டுமென நினைக்கிறேன். உனக்கு என்ன வேண்டும், நான் என்ன செய்ய வேண்டும்..? என்றான்.

தாய் வியப்புடன் மகனைப் பார்த்தாள். ஏன்மகனே அப்படி இப்போது கேட்கிறாய்..? ஒரு தாயாக நான் என்னுடைய கடமையைத் தானே செய்தேன் என்றாள்...

இருந்தாலும் தன் தாய் செய்த தியாகங்களுக்கு ஏதாவது செய்தாக வெண்டுமென மகன் நினைத்தான். தொடர்ந்து தாயிடம் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டே இருந்தான்.

தாயும் மறுப்பினைத் தெரிவித்து வந்தாள். ஒரு கட்டத்தில் மகனின் ஆசையைப் பூர்த்திசெய்ய முன்வந்தாள். அப்போது, மகனிடம், சரி.....நீ தொடர்ந்து கேட்பதால், ஒன்று சொல்கிறேன். அதை நிறைவேற்றினால் போதும்.. என்றாள். மகனுக்கு ஒரே சந்தோஷம். அம்மா என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்.. என்றான்.,

ஒன்றுமில்லை மகனே, நீ குழந்தையாக இருந்த போது எனது அருகில் படுத்து உறங்கினாயே, அதைப் போல இன்று ஒரு நாளைக்கு மட்டும் என்னுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்து உறங்கு.. அதுவே போதும்.. எனக் கூறினாள் தாய். அம்மா, அட இதுவா.. நீ கேட்பது, வித்தியாசமாக உள்ளது. இருப்பினும் அதுதான் உனக்கு மகிழ்ச்சியைத் தருமென்றால் அதை இன்றே நிறைவேற்றுகிறேன் என்று அன்றிரவு, தனது தாயின் படுக்கையில், தாயின் அருகிலேயே படுத்துக் கொண்டான்.

தனது மகன் தூங்கி விட்டான் என்று அறிந்த தாய், எழுந்துசென்று ஒருவாளியில் நீரை நிரப்பிக் கொண்டு வந்து, தனது மகன் படுத்திருந்த இடத்தில் தண்ணீரினால் நனைத்தாள். தூக்கத்தில் தான் படுத்திருக்கும் இடம் ஈரமாக இருப்பதை உணர்ந்த மகன், தூக்கத்திலேயே படுக்கையின் மறுபக்கத்திற்கு உருண்டு சென்று படுத்தான்.

அங்கே சென்று மகன் தூங்கியதும், மீண்டும் நீரை எடுத்து அவன் படுத்திருந்த இடத்தில் தெளித்து ஈரப்படுத்தினாள். மீண்டும் படுக்கை ஈரமாக இருப்பதை உணர்ந்த மகன், தூக்கத்திலேயே படுக்கையின் கால்புறம் இடம் நோக்கி நகர முயன்றான். சிறிது நேரத்தில் அந்த இடமும் ஈரமாக இருப்பதை உணர்ந்த மகன், தூக்கம் கலையவே, எழுந்து பார்க்கும் போது, தனது தாய் தண்ணீருடன் இருப்பதைப் பார்த்து, என்ன அம்மா செய்கிறாய் தூங்கக்கூட விடமாட்டேன் என்கிறாய்? ஈரத்தில் தூங்க வேண்டுமென எப்படி எதிர் பார்க்கிறாய்.. எனக் கோபத்துடன் கேட்டான்..

அப்போது தாய் அமைதியாகச் சொன்னாள். மகனே.. அம்மாவின் தியாகத்துக்கு ஈடுகட்ட, திருப்பி ஏதாவது செய்ய வேண்டுமென நீ நினைத்தாய். நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையாக இருக்கும்போது இரவு நேரங்களில் அடிக்கடி படுக்கையை நனைத்து விடுவாய். உடனே நான் எழுந்து உனக்கு உடையை மாற்றி ஈரமில்லாத இடத்தில் படுக்க வைத்து விட்டு, நான் ஈரமான இடத்தில் படுத்துக் கொள்வேன். அதையே நீ கேட்டதற்கிணங்க நானும் செய்தேன் என்றாள். மகன் திகைத்து நின்றான். இந்தச் சிறிய விடயத்தைக்கூடச் செய்ய முடியாதவனாகி விட்டேனே என மனம் கோணினான்.

ஆம், உலகில் எல்லா கடன்களையும் அடைத்து விட முடியும், ஒன்றைத் தவிர. அதுதான் தாயின் தியாகம். தாயின் தியாகத்தினை, எந்த ஒரு மகவாலும் ஈடு செய்ய முடியாது. நீ அவளுடைய சதையும், ரத்தமுமாகும்.

அன்பே சிவம் என்கிறார்கள் பெரியோர்கள். உண்மையிலேயே, அன்பே தாய் என்பது தான் நிதர்சனமான உண்மை. நினைத்தபோது இறைவனைக் காணத்தான், இறைவன் தாயைப் படைத்தான். அதுவே நிஜம். உண்மை..




*(மூலம்: இணையம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. கண்டிப்பு



ஆயிரம் மடங்கு அன்பை
உள்ளே வைத்துக் கொண்டு..
இதயத்தை இறுக்கமாக்கிக்கொண்டு
எதிரியைப்போல் திரியும் ..
தான் காணாத உலகத்தை
காட்டத் துடிக்கும் ..
ஒரே ஜீவன் அப்பா மட்டும்தான்.. ..

**தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க்கு எல்லாம் இனிது** *(-மக்கட்பேறு -68)*



[தம்மக்களின் அறிவுடைமை தமக்கு இன்பம் பயப்பதை விட உலகத்து உயிர்களுக்கெல்லாம் மிகுந்த இன்பம் பயப்பதாகும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டிப்பு

மின்விசிறியை நிறுத்தாமல் வெளியே போகிறாய், ஆளில்லாத அறையில் டி.வி. ஓடுகிறது பார், அதை அணைத்துவிட்டுச் செல்லப் பழகு.. பேனாவை அதற்குரிய ஸ்டாண்டில் வை, கீழே கிடக்குது பார்.

இப்படியே சின்னச்சின்ன விஷயத்திற்கெல்லாம் அப்பா அவனை நச்சரித்துக் கொண்டிருப்பது அவனுக்குச் சிறிதளவும் பிடிக்கவில்லை.

நேற்றுவரை வீட்டில் இருந்ததால் அதையெல்லாம் தாங்கிக்கொள்ள வேண்டி இருந்தது. இன்று அவனுக்கு வேலைக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு வந்திருந்தது.

கடவுளே 'வேலை கிடைத்ததும் வேறு எங்காவது வெளியூர் போய்விட வேண்டும். அப்போது தான் அப்பாவின் நச்சரிப்பு இருக்காது..' என்று கடவுளை வேண்டிக் கொண்டான்.

நேர்முகப்பரீட்சைக்கு செல்லும்போதும் "கேட்கிற கேள்விக்கு தயங்காமல் தைரியமாக பதில் சொல்". பயப்படாதே.. தெரியவில்லை என்றாலும் தைரியமாக எதிர்கொள், என்று செலவுக்கு கூடுதலாக பணம் கொடுத்து வழியனுப்பி வைத்தார் அப்பா. இன்றுமா..? என எரிச்சலுடன் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்த முகவரிக்கு வந்து சேர்ந்தான். கட்டிடத்தின் பிரதான நுழைவாயிலில் பாதுகாப்பு அதிகாரிகள் எவரும் இல்லை.

கதவு சற்றே திறந்திருந்தாலும் அதன் தாழ்ப்பாள் மட்டும் வெளியே நீட்டிக்கொண்டு உள்ளே நுழைபவர்மேல் இடித்துவிடுவது போல் இருந்தது. அதைச்சரிசெய்து கதவைச்சரியாகச் சாத்திவிட்டு உள்ளே நுழைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபாதையின் இருபுறமும் அழகு மலர்ச்செடிகள் வரவேற்றன. தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த காவலாளி குழாயை அப்படியே போட்டுவிட்டு எங்கேயோ போயிருந்தான். அதனால் தண்ணீர் செடிகளுக்குப் பாயாமல் வீணாக நடைபாதையை நனைத்துக் கொண்டிருந்தது. அக் குழாயைக் கையில் எடுத்தவன் செடியின் அடியில் நீர்படும்படி ஒழுங்காக்கிவிட்டு கடந்து சென்றான்.

வரவேற்பறையில் யாரையும் காணவில்லை. ஆனால் நேர்முகப்பரீட்சை முதலாவது தளத்தில் நடைபெறுவதாக அறிவிப்பு வைத்திருந்தார்கள். மெதுவாக மாடிப்படியில் ஏறினான். நேற்று இரவில் போடப்பட்ட மின்விளக்கு பகல் பதினொரு மணியாகியும் எரிந்து கொண்டிருந்தது. மின்குமிழை அணைக்காமல் செல்கிறாயே?'' என்ற அப்பாவின் கண்டிப்பு காதுக்குள் ஒலிப்பதுபோல் தெரிய, எரிச்சல் வந்தாலும் படியின் அருகே இருந்த ஆளியை இயக்கி விளக்கை அணைத்தான்.

மாடியில் பெரிய ஹாலில், ஏராளமானவர்கள் அமர்ந்திருந்தார்கள். கூட்டத்தைப் பார்த்தவனுக்கு "இங்கு வேலைகிடைக்குமா?'' என இதயம் படபடக்க ஆரம்பித்தது.

பதற்றத்துடன் அறைக்குள் நுழைய காலடி வைத்தவன், மிதியடியில் 'நல்வரவு' என்ற எழுத்து தலைகீழாக இருந்ததைக் கவனித்தான். அதையும் வேண்டாவெறுப்பாக சரிசெய்துவிட்டு உள்ளே நுழைந்தான்.

அறையின் முன்புறத்தில் நேர்முகப் பரீட்சைக்கு வந்தவர்கள் அமர்ந்திருக்க, பின்பக்கத்தில் பல மின்விசிறிகள் தேவையில்லாது வீணாகச் சுற்றிக் கொண்டிருந்தன. 'யாருமே இல்லாமல் ஏன் அறையில் விசிறி ஓடுகிறது?' என்ற அப்பாவின் கேள்வி காதிற்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிக்க, மின் விசிறிகளையும் நிறுத்திவிட்டு, மற்றவர்களுடன் சென்று அமர்ந்தான்.

நேர்முகப் பரீட்சைக்கு வந்திருந்தவர்கள் ஒவ்வொருவராக உள்ளே அழைத்து மற்றொரு வழியாக வெளியே அனுப்பிக் கொண்டிருந்தனர். இதனால் என்ன கேள்வி கேட்பார்கள் என்பதை எவருக்கும் அறியமுடியவில்லை.

அவனின் முறையும் வந்தது. கலக்கத்துடனே நேர்முகப்பரீட்சைக் குழுவின் முன்புபோய் நின்றான். சான்றிதழ்களை நீட்டினான். அதைப் பிரித்துப் பார்க்காமலேயே அந்தஅதிகாரி "நீங்கள் எப்போது வேலைக்குச் சேருகிறீர்கள்?" என்று கேட்டார்.

'இது நேர்காணலில் கேட்கப்படும் புத்திக்கூர்மை கேள்வியா, அன்றேல் வேலை கிடைத்தமைக்கான அறிகுறியா.? எதுவென்று தெரியாமல் குழம்பி நின்றான். என்ன யோசிக்கிறீர்கள்.? அந்த அதிகாரி மீண்டும் கேட்டார்?.

நாங்கள் இங்கே யாரிடமும் எதுவித கேள்வியும் கேட்கவில்லை. கேள்வி பதிலில் ஒருவரின் மேலாண்மையை தெரிந்துகொள்வது கடினம். அதனால் செயல்பாட்டின் அடிப்படையில் தேர்வு வைத்துவிட்டு, கேமராமூலம் கண்காணித்தோம்.

இங்குவந்த எவருமே தேவையில்லாமல் வீணாகிய நீர், எரிந்த மின்விளக்கு, ஓடிய விசிறி எதையுமே சரி செய்யவில்லை. நீங்கள் அத்தனையும் சரி செய்துவிட்டு உள்ளே வந்தீர்கள். அதனையே நாங்கள் எதிர்பார்த்தோம். நாங்கள் உங்களையே தேர்வு செய்திருக்கிறோம்" என்றார்.

அப்பாவின் நடவடிக்கைகள் எப்போதும் அவனுக்கு எரிச்சலையேதரும். அந்த ஒழுங்குமுறையே இன்று வேலை வாங்கித் தந்திருக்கிறது என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து மனச்சாட்சி உறுத்தியபோதும், நெகிழ்ச்சியாகவும் அதேவேளை பெருமையாகவும் இருந்தது. அவர் மீதுள்ள வெறுப்பும் முற்றாகத் தணிந்தது.

உளி விழுகையில் வலி என நினைக்கும் எந்த பாறையும் சிலையாவதில்லை.. வலி பொறுத்த சில பாறைகளே சிலையாகி ஒளி கூட்டுகின்றன.

நாம் அழகிய சிலையாக உருவாக நமக்குள் இருக்கும் வேண்டாத சில தீய குணங்களை கண்டிப்பதால், தண்டிப்பதால், சில நேரம் வில்லனாக நமக்கு தெரியும் தந்தை, உளி போன்று, கட்டுப் படுத்துவதால் தான் நாம் முழுமனிதனாகின்றோம்.




*(மூலம்: இணையம்)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. பெற்றோர்



முதியோர் இல்லத்துக்கு
பணம்கொடு..
பொருள் கொடு..
உணவு கொடு..
உடைகொடு..
உன் பெற்றோரைமட்டும்
கொடுத்துவிடாதே.. ..

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கள் பெறின் *(அறத்துப்பால்-மக்கட்பேறு-62)*



[பழி இல்லாத நல்ல மக்களைப் பெற்றால்
ஒருவனுக்கு ஏழேழு பிறவியிலும் தீவினைப்
பயனாகிய துன்பங்கள் சென்று சேரா]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர்

ஒரு சிறுவன் தினமும் வந்து ஒரு மரத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டு, ஆடிப்பாடி விளையாடி விட்டுப் போவான். அவனைப் பார்த்தாலே அந்த மரத்துக்கு ஆனந்தம் பொங்கும்.

திடீரென்று ஒரு நாள் அந்த சிறுவன் வரவில்லை. மரமும் அவனை எதிர்பார்த்துக் காத்திருந்தது. சில நாள் கழித்து அந்த சிறுவன் வந்தான். அந்த மரம் சந்தோஷத்துடன் அவனைப் பார்த்து, ஏன் இவ்வளவு நாளும் வரவில்லை. உனக்கு என்ன பிரச்சனை என்று கேட்டது. என் நண்பர்கள் எல்லோரும் விதம்விதமான அழகான, பலவர்ண பொம்மைகள் வைத்திருக்கிறார்கள. ஆனால், என்னிடம் மட்டும் ஒன்றும் இல்லை எனக் கவலையுடன் கூறினான். கவலைப்படாதே. இந்த மரத்தில் உள்ள பழங்களை பிடுங்கி, எடுத்துச் சென்று, கடையில் விற்று பிடித்த பொம்மைகளைக் வாங்கிக்கொள். ஆனால் என்னை பார்க்க அடிக்கடி வந்து கொண்டிரு என்றது. அவனும் மகிழ்ச்சியுடன் பழங்களைப் பறித்து சென்றான்.

சிறிதுகாலம் அவன் வரவேயில்லை. மரம் மீண்டும் அவனுக்காக ஏங்கியது. பல வருடம் கழித்து ஒரு நாள் வந்தான். அவன் முகத்தில் கவலைதெரிந்தது. இப்போது அவன் வளர்ந்திருந்தான். அவனைப் பார்த்ததும் மரத்துக்கு மிகுந்த சந்தோஷம். வா என்னிடம் வந்து விளையாடு. இந்த கிளையில் ஏறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்து பாட்டுப் பாடு என்றது. அதற்கு அவன் இல்லை இப்பொழுது வயதாகி விட்டது. எனக்கு மனைவி குழந்தைகள் உள்ளனர், ஆனால், நாங்கள் வசிக்க சொந்தமாக நல்ல வீடு இல்லை. வீடு வாங்க என்னிடம் பணமில்லை என்றான். மரம் உடனே சொன்னது.. பரவாயில்லை.. உனக்கு கொடுக்க என்னிடம் பணம், காசில்லை. அதற்கு பதிலாக, என்னுடைய கிளைகளை வெட்டி எடுத்துச்செல். அதில் ஒருவீடு கட்டிக்கொள் என்றது.

அவனும் கோடரியால் கிளைகளை வெட்டத் தொடங்கினான். நீ எதையென்றாலும் செய் ஆனால் ஒரேயடியாக என்னைப் பார்க்க வராது இருந்து விடாதே என்று கெஞ்சியது. முடிந்த வரை, வருடம் ஒரு முறையாவது வந்து பார்த்துச் செல் என்றது. வேண்டிய கிளைகளை வெட்டி எடுத்துச் சென்றான். அதற்கு பின் பல வருடங்கள் வரவில்லை. அவன் வருவான், வருவான் என்று மரமும் தினமும் ஏக்கத்துடன் காத்திருந்தது.

பல வருடங்கள் கழித்து பார்க்க வந்தான். மரம் அவனைப் பார்த்து, ஆனந்தக் கூத்தாடியது. அவன் எப்போதும் போல், சோகமாக இருந்தான். ஏன் இப்படி இருக்கிறாய் என்று மரம் கேட்டது.என் மீன்பிடிப்படகு உளுத்து பழுதடைந்து விட்டது. படகு இல்லாததால் மீன் பிடிக்க முடியவில்லை. அதனால் வருமானம் இல்லை. நாங்கள் மிகவும் கஷ்டப்படுகிறோம் என்றான். மரம் துடித்துப் போனது. நான் இருக்கிறேன். என்னுடைய அடி மரத்தை வெட்டி எடுத்துக் கொள். இதை வைத்து நீ பெரிய படகு கட்டிக்கொள் என்றது. அவன் அடி மரத்தை வெட்டும் போது. மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்காதே. வருடத்திற்கு ஒருமுறை என்றில்லாமல், வசதியான நேரம் என்னைப் பார்க்க வா என்று கண்ணீர்மல்க கெஞ்சிக் கேட்டது.

மீண்டும் பலநாளாக அவன் வரவேயில்லை. மரத்துக்கு நம்பிக்கை மெல்ல மெல்லக் குறைய ஆரம்பித்தது. அப்போது திடீரென ஒருநாள் அவன் வந்தான். தலையெல்லாம் நரைத்து, கூன்விழுந்து வயதான தோற்றத்துடன் அவன் இருந்தான். அவனைப் பார்த்து மரத்துக்கு அழுகையே வந்து விட்டது. இப்போது உனக்கு கொடுக்க என்னிடம் பழங்கள் இல்லை, கிளைகள் இல்லை அடி மரமும் இல்லை உனக்கு கொடுக்க, என்னிடம் ஒன்றுமே இல்லையே என வருந்தியது.

நீ பழங்கள் கொடுத்தாலும் அதைக் கடிக்க எனக்கு பற்கள் இல்லை. வீடுகட்டவும் படகு செய்யவும் என்னிடம் சக்தி இல்லை. எனக்கு இப்போது ஓய்வுமட்டுமே தேவைப்படுகிறது என்றான். அப்படியா. இதோ தரையில் கிடக்கும் என் வேர்களில் படுத்துக் கொள் என்றது. அவனும் அந்த வேர்களில் தலை வைத்துப் படுத்துக் கொண்டான். இந்த சுகத்துக்கு தான் அந்த மரம் பல வருடங்கள் ஏங்கி தவித்தது. இப்போது அந்த ஏக்கம் நிறைவேறியது. அந்த மரம் ஆனந்தக் கண்ணீர் விட்டது.

'இது மரத்தின் கதையல்ல. நம்பெற்றோர்களின் கதை'. இந்தச் சிறுவனைப் போல் நாமும் சிறு வயதில் தாய் தந்தையோடு மகிழ்வோடு விளையாடுகின்றோம். நாம் வளர்ந்து பெரியவனானதும் நமக்கென்று குடும்பம் குழந்தை என்று ஒதுங்கி விடுகின்றோம். ஆனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஏதாவது தேவை அல்லது பிரச்சனை என்றால் மட்டும்தான் அவர்களைத் தேடிப் போகின்றோம். நம்மிடம் இருப்பவை எல்லாம் அவர்கள் கொடுத்தது என்பதை மறந்துவிடுகின்றோம். அவர்கள் எமக்காக உழைத்து ஓடாகியவர்கள் என்பதை மறந்து விடுகின்றோம்.

பாசம், பரிவு, அன்பு, அரவணைப்பு ஆதரவான அனுசரணையான வார்த்தைகள் போன்ற வையைத்தவிர நம்மால் அவர்களுக்கு பிரதியுபகாரமாக எதனையும் கொடுக்கமுடியாது. அவர்கள் விரும்பு வதும் அதைத்தான். மறந்து விடாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆசை



பிள்ளைகளின் பிள்ளைப்பருவத்தில்
நீங்களும் வாழுங்கள்..
கனவுகளுக்கு ஊட்டமளியுங்கள்.. ..
அவர்களின் முதற்காலடியைக் கவனியாது
எத்தனை வெற்றிப்படிகள் நீங்கள் ஏறினாலும்
அவை அனைத்தும்
அர்த்தமற்றவையாகின்றது..

*-ராபீன் சர்மா*

**என்பி லதனை வெயில் போலக் காயுமே**
**அன்பி லதனை அறம்** *(அன்புடைமை-77)*



[எலும்பு இல்லாத உடம்போடு வாழும் புழுவை வெயில் காய்ச்சி வருத்துவது போல அன்பு இலாதஉயிரை அறம் வருத்தும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை

அந்தத் தாய் ஒரு ஆசிரியை. அன்று இரவுச் சாப்பாடு முடித்ததன் பின்பு, வகுப்பு மாணவர்கள் எழுதிக் கொடுத்திருந்த விடைத்தாள்களைத் திருத்த மேசையில் உட்கார்ந்தார். கணவர் அவருக்கு எதிரே ஒரு மேசையிலிருந்து தன் கையிலிருந்த ஸ்மாட் தொலைபேசியில் ஏதோ செய்து கொண்டிருந்தார்.

சிறிது நேரம் சென்றது. அவர் எதேச்சையாகத் திரும்பிப்பார்த்த பொழுது தன் மனைவி கண்களில் நீர்ததும்ப தன் கையிலிருந்த ஒரு விடைத்தாளையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார். ஏய்.. என்ன நடந்தது.. இப்போது எதற்கு அழுகிறாய்? என்றார்.

அதுவந்து.. ஒன்றும் இல்லை.. இன்று மாணவர்களுக்கு 'என்னுடைய ஆசை" என்பது பற்றி கட்டுரை எழுதும்படி வகுப்பில் கொடுத்தேன் என்றார். சரி அதற்கு இப்பொழுது என்ன நடந்தது. அதற்கு ஏன் அழுகிறாய் அப்படி என்னதான் எழுதியிருக்கின்றது எனக் கணவன் கேட்டார் "பாருங்கள் ஒரு மாணவி எழுதியதை, படிக்கிறேன் கேளுங்கள்.." என ஆசிரியையான மனைவி பதில் கூற கணவன் சரி என தலை அசைக்க வாசிக்க ஆரம்பித்தார்.

எனக்கு ஒரு ஸ்மார்ட் தொலைபேசி ஆக ஆசை. ஏனென்றால் அம்மா, அப்பா இருவருக்குமே மிகவும் பிடித்தது அதுதான். அவர்கள் பெரும்பாலான நேரங்களில் என்னைக் கவனிப்பதைக்கூட மறந்து விட்டு ஸ்மார்ட் தொலைபேசியை நன்றாகக் கவனிக்கின்றார்கள். கண்ணை இமை காப்பது போல அதனைப் பாதுகாத்துக் கொள்ளுகிறார்கள். அப்பா அலுவலகத்திலிருந்து வந்தாலும் என்னுடன் கதைப்பதற்கே நேரம் இருக்காது. ஆனால் ஸ்மார்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசியுடனேயே எப்பொழுதும் இருப்பார். சாப்பிடும் போது, நித்திரை கொள்ளும் பொழுது எவ்வளவு முக்கியமான தருணங்களில் எல்லாம் அதனுடனேயே இருப்பார். நான் எவ்வளவு சத்தம் போட்டு எனது தேவைக்காகக் கூப்பிட்டாலும் காது கொடுத்துக் கேட்பதில்லை. கேட்டாலும் ஏதோஒரு சாட்டுச் சொல்லி கணக்கிலெடுக்கமாட்டார். ஆனால் ஸ்மார்ட் தொலைபேசி ஒரு தடவை மணி அடித்தால் போதும் அவ்வளவு வேலையையும் அப்படியே போட்டு விட்டு ஓடிச்சென்று விடுவார்.

ஓய்வாக இருக்கும் பொழுது எனக்கு அப்பாவுடன் விளையாட ஆசையாக இருக்கும். ஆனால் அவர் ஸ்மார்ட் தொலைபேசியில் இருக்கும் விளையாட்டுக் களை விளையாடிக் கொண்டிருப்பார். அவர்கள் யாருடனாவது ஸ்மார்ட் தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருக்கும் போது நான் அவசர தேவையின் நிமித்தம் கூப்பிட்டாலும் கோபத்துடன் ஏசுவார். நான் சொல்வது அவர்காதில் விழுவதில்லை.

மொத்தத்தில் நான் என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றேனோ அத்தனை யையும் புறந்தள்ளி, நான் எதிர்பார்ப்பதிலும் மேலாக தமது ஸ்மார்ட் தொலைபேசியைக் கவனிக்கிறார்கள்.எனவே அம்மாவும்அப்பாவும் என்னையும் அன்புடன் கவனிக்க வேண்டும் என்பதற்காக நான் ஒரு ஸ்மார்ட் தொலைபேசியாக இருக்க ஆசைப்படுகிறேன். இதைக்கேட்ட கணவரும் நெகிழ்ந்து போனார். "சரி இதையார் எழுதியிருக்கின்றது..? என்றார். "வேறொரு வருமில்லை எங்கள் மகள்தான்" என்றாள்.



*மூலம்: இணையம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. பாசம்



பெண் பிள்ளைகளைப் பெற்ற
எல்லா அப்பாமார்களுமே
அதிர்ஷ்டசாலிகள்..
ஏனென்றால்
அவர்களுக்கு மட்டும் தான்
இரண்டு தாய்...!

**அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்**
**ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்.** *(அன்புடைமை--71)*



[அன்புக்கும் அடைத்துவைக்கும் தாழ்உண்டோ.?
அன்புடையவரின் சிறுகண்ணீரே (உள்ளே இருக்கும்
அன்பை) பலரும் அறிய வெளிப்படுத்தி விடும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசம்

திருமணமான அன்று அந்த தம்பதியினர் தமக்குள் ஒருபோட்டி வைத்துக் கொண்டனர். இன்று முழுவதும் யார் வந்து கதவைத் தட்டினாலும் நாம் திறக்கக் கூடாது என்பது தான் அந்த போட்டி.

போட்டி ஆரம்பித்த சில மணி நேரத்திலேயே கணவரின் பெற்றோர்கள் வந்து கதவைத் தட்டினர். கணவர் திறக்கலாம் என்று நினைக்கும்போது, போட்டி ஞாபகத்திற்கு வரவே கதவைத் திறக்காமலே இருந்து விட்டான். அவனின் பெற்றோரும் சிறிது நேரம் கதவு அருகிலேயே கால்கடுக்கக் காத்திருந்து கதவு திறக்காததால் திரும்பிச் சென்று விட்டனர்.

பின்பு சிறிது நேரத்தில் பெண்ணின் பெற்றோர் கதவை தட்டினர். தம்பதிகள் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர். மனைவியால் தன் பெற்றோர் வெளியே நிற்பதைப் பார்க்க சகிக்க முடியாமல் கண்கலங்கிக்கொண்டே என்னால் இனிமேலும் சும்மா இருக்க முடியாது போட்டி வேண்டாம் என்று கூறியவாறே கதவைத் திறந்து விட்டாள்.

நாட்கள் உருண்டோடின, அவர்களுக்கு மூன்று மகன்கள் பிறந்தார்கள். நான்காவதாக ஒரு மகள் பிறந்தாள். கணவரும் தனக்கு மகள் பிறந்ததை கொண்டாட பெரிய விருந்து ஏற்பாடு பண்ணினார். மகிழ்ச்சியுடன் விருந்து நடந்து முடிந்தது.

அன்று இரவு அவர் மனைவி, நமக்கு மகன்கள் பிறந்தபோது இந்த அளவு நீங்கள் கொண்டாட வில்லையே என்று கேட்டார். என்மகள் தான் நாளை எனக்காகக் கதவைத் திறப்பாள் என்றார்.



மூலம்: இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. கட்டுப்பாடு



தந்தையே..
என் விழி திறப்பிலிருந்து
நின் விழியோர சுருக்கங்கள் வரை
நீ எனக்கு வழிகாட்டி நிற்கின்றாய்..
எனக்கு சில வலிக்கின்றன..
அவை என் வலிமறைத்து
விழிதிறக்க என உணரும்போது
வலி தானாகப் பறந்து விடுகின்றது..

**எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும்** *(கல்லாமை 410)*



[எவ்வளவு சிறிதேஆயினும் நல்லவற்றைக் கேட்டறிய வேண்டும். கேட்ட அந்தஅளவிற்கு அவை நிறைந்த பெருமையைத்தரும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாடு

தன் மகளைச் சிறு சிறு விசயங்களுக்காக அடிக்கடி கடிந்து கொள்வதால் அவள் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து இறுதியில் அப்பாவிடமே நேரடியாக ஏனப்பா என்னை இப்படி எடுத்ததற்கெல்லாம் கண்டிப்புடன் நடத்துகிறீர்கள்.? என்னையும் கொஞ்சம் சுதந்திரமாக விடவேண்டும் என்று உங்களுக்கு எண்ணத் தோன்றவில்லையா என்று கேட்டாள். இதைச்சற்றும் எதிர்பாராத தந்தை, இதை எப்படி மகளுக்கு சொல்லிப்புரியவைப்பது என யோசித்தார்.

அப்படி இருக்கும் பொழுது ஒரு நாள் மகள், 'அப்பா நான் பட்டம் விட்டு விளையாடப் போகிறேன், நீங்களும் வாருங்கள்..' என அழைத்துக் கொண்டு வீட்டின் மொட்டை மாடிக்குச் சென்றாள். பட்டத்தை நூலில் கட்டி பறக்கவிட்டு மகிழ்ந்தாள்... அப்படி மகிழ்ந்திருக்கும் வேளையில் "பட்டம் மேலே பறக்கப்பறக்க எவ்வளவு அழகாய் இருக்கிறது. ஆனால் அதன் விருப்பம் போல சுதந்திரமாகப் பறக்க முடியவில்லையே.. அதற்கு தடையாய் இருப்பது என்ன மகளே.." என்று தந்தை கேட்டார்.

இந்த நூல் தான் அப்பா அதை தன் இஷ்டத்திற்கு விடாமல் கட்டி வைத்திருக்கிறது என்று மகள் சட்டெனப்பதிலிறுத்தாள். ஆ.. அப்படியா எனக் கேட்டுவிட்டு அந்த நூலை திடீரென அறுத்து விட்டார்... பட்டமும் தன் இஷ்டப்படி பறந்தது. ஆனால் சற்றுநேரத்திலேயே எங்கோ விழுந்து எல்லாம் கிழிந்தது. ஏனப்பா நூலை அறுத்து விட்டீர்கள்.. பாருங்கள்.. இப்போது பட்டமே கிழிந்து விட்டது.. எவ்வளவு அழகாகப் பறந்த பட்டம்.. நூல் அறுந்தால் பட்டம் விழுந்து கிழிந்து விடும் என்பது தெரிந்தும் ஏனப்பா அறுத்துவிட்டீர்கள் என அழுதாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளே.. நீதானே இந்த நூல்தான் பட்டத்தை தன் இஷ்டப்படி பறக்கவிடாமல் தடுக்கின்றது என்றாய் அதனால் தான் அறுத்து விட்டேன் என்றார்.

அப்பா..!! என அழத்தொடங்கினாள்..

ஆம் மகளே.. பார்த்தாயா.. நூல் பட்டத்தை, தன் விருப்பப்படி பறக்கவிடாமல் தடுத்த போதும், நேரான வழியில் பட்டம் பறந்து உயரங்களை அடைய இந்த நூல் தான் உதவியாய் இருந்திருக்கின்றது... இப்போதாகிலும் புரிகின்றதா..

ஆம் அப்பா..

இதேபோலத்தான் மகளே உன் அப்பாவாகிய நானும் ஒரு நூல்தான்... நீதான் அந்த பட்டம்... நீ என்னுடைய பேச்சைக் கேட்டு அதன்படி நடப்பாயெனில் என் பாதுகாவலுடன் உயர உயரப் பறக்கலாம்... உன் இஷ்டப்படி வாழ நினைத்தால் அந்தப் பட்டம் திசைதெரியாது சென்று கிழிந்தது போல உன் வாழ்க்கையும் சீரழிந்துவிடும்... இப்போதாகிலும் நான் ஏன் உன்னை அவ்வப்போது கண்டித்தேன் என்பதனை புரிந்திருப்பாய் என எண்ணுகின்றேன். கண்டிக்கிறேன் என்பதற்காக நூலாகிய என்னை அறுத்துவிடாதே என்றார்.. அழுத மகள் தன் அப்பாவை கட்டி அணைத்துக் கொண்டாள்...!

ஆம்.. உங்களுக்கு இனிமையாய் தோன்றுகின்ற வழிகள் ஏராளம் இருக்கலாம்.. ஆனால் அவற்றின் முடிவு பயங்கரமானது... பெற்றோர் உங்களை நல் வழிப்படுத்துவதற்காகவே கண்டிக்கிறார்களேயன்றி உங்கள்மீதுள்ள கோபத்தினால் அல்ல..

எனவே பெற்றோர் வழிகாட்டலின்படி வாழக் கற்றுக் கொள்ளுங்கள் உங்கள் வாழ்வு வளம்பெறும்...!



மூலம்: இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. எண்ணம்



மனக் கணக்கு
தவறலாம்..
ஆனால்
மனிதரைப் பற்றிய கணக்கு
தவறவே கூடாது.. ..
மீளுவது கடினம்.. .. ..

இனைத்துணைத் தென்பது ஒன்றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன் *(விருந்தோம்பல்–87)*



[விருந்தோம்புதலாகிய வேள்வியின் பயன் இவ்வளவு என்று அளவு படுத்திக் கூறத்தக்கது அன்று. விருந்தினரின் தகுதிக்குஏற்ற அளவினதாகும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

சுட்டியான சிறுவன் ஒருவன் தன் கைகளில் இரண்டு அப்பிள் பழங்களை வைத்திருந்தான். அங்கு வந்த அவனின் உறவு முறையான பாட்டி 'நீ இரண்டு அப்பிள் பழங்கள் உன்னிடம் வைத்திருக்கிறாய் தானே.. பாட்டிக்கும் ஆசையாக இருக்கின்றது.. எனக்கு ஒன்றைத் தருகிறாயா' என்று கேட்டாள்.

தன் பாட்டியை ஒரு நிமிடம் பார்த்த அந்தச் சுட்டிப்பையன் உடனே ஒரு அப்பிள் பழத்தைக் கடித்து விட்டான். பாட்டிக்கு ஒருமாதிரியாகப் போய் விட்டது..

பாட்டி சுதாகரிக்கும் முன்னரே அவன் மற்றைய அப்பிளையும் கடித்து விட்டான். பாட்டியின் முகத்திலிருந்த சிரிப்பு உறைந்து போனது. தனது ஏமாற்றத்தினை வெளிப்படுத்த முடியாது தவித்தாள்.

அப்பொழுது அந்தச் சிறுவன் பாட்டியை நோக்கி 'பாட்டி இந்த அப்பிள் தான் இனிப்பாக இருக்கின்றது. நீ எடுத்துக்கொள்' என நீட்டினான்.

ஆம். நீங்கள் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். எவ்வளவு அனுபவம் உள்ளவராகவும் இருக்கலாம். அறிவாளியாகவும் இருக்கலாம். ஆனால் ஒருவரைப் பற்றி எடுத்த எடுப்பிலேயே முடிவெடுப்பதனைத் தவிர்க்கவும்.

எப்போதும் போதுமான அளவு இடைவெளி கொடுத்து ஒருவரைப்பற்றி சரியான தீர்மானம் எடுக்கவும். நீங்கள் உடனடியாக அவரைப் பற்றி எடுத்த கண்ணோட்டம் தவறாகவும் இருக்கலாம். எதையும் மேலோட்டமாகப் பார்த்துக் கணிக்காமல், அவசரப்படாமல் ஆறுதலாக யோசித்து முடிவெடுங்கள்.




மூலம்: இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. பக்தி



**நீ எந்த ஒரு**
**செயலைச் செய்தாலும்**
**அதன் பொருட்டு**
**உனது மனம் ஆன்மா முழுவதையும்**
**அதற்காகவே அர்ப்பணித்து விடு..!**

*-சுவாமி விவேகானந்தர்*

**மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப**
**தன்னுயிர் அஞ்சும் வினை** *(அருளுடைமை- 244)*



[தன் உயிரின் பொருட்டு அஞ்சி வாழ்கின்ற தீவினை,
உலகில் நிலைபெற்றுள்ள மற்ற அருளுடையவனாக
இருப்பவனுக்கு இல்லை]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பக்தி**

வெட்டியான் (சுடலைகாப்பவன்) ஒருவன் பிணத்தினை மயானத்தில் புதைப்பதற்காகக் குழி தோண்டும்போது, அங்கே அழகிய சிவலிங்கம் ஒன்றைக் கண்டெடுத்தான்.

அதை அரசனிடம் எடுத்துச் சென்று கொடுத்தபோது "சுடுகாட்டில் கிடைத்ததை நீயே வைத்து வழிபாடு செய்துகொள்.." என்றான். அப்போது வெட்டியான் மிகப் பணிவாக, "இலிங்கத்தை முறையாக வழிபடுவது எப்படி எனத் தெரியவில்லையே," என வருத்தத்துடன் கேட்டான். அப்போது அரசன் ஏளனமாக உன்னிடம் வேறு என்ன உள்ளது பிணம் சுடும் சாம்பலும் பிணத்திற்குப் போடும் வாய்க்கரிசியில் சமைத்த உணவும்தானே.. அதைவைத்துத்தானே என்னவென்றாலும் செய்யலாம், சரி பரவாயில்லை, "சிவ வழிபாடு மிக மிகச் சுலபமானது. நீ தினமும் ஆற்றுக்குச் சென்று குளித்துவிட்டு, சுடுகாட்டில் உள்ள சாம்பலை அள்ளி வந்து அதைக் கொண்டு இலிங்கத்திற்கு அபிஷேகம் செய்ய வேண்டும். இந்த சாம்பல்தான் சிவனுக்கு மிகவும் பிடித்தமானது. நீ உனக்காக சமைக்கும் உணவை அவருக்கு நைவேத்யம் செய்து விட்டுச் சாப்பிட வேண்டும். அவ்வளவு தான்!" என்று கேலியாக ஏளனத்துடன் அரசன் கூறிவிட்டான்.

இறைவழிபாடு என்றால் என்ன என்றே தெரியாத வெட்டியானும் அவனது மனைவியும், அரசனது வார்த்தைகள் ஏளனமானவை என்பதை அறியாமல், உண்மையானவை எனநம்பி அரசன் கூறியபடியே பிணம் எரித்த சாம்பலைக் கொண்டு அந்தச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்து, பிணங்களுக்கு இடும் வாய்க்கரிசியைக் கொண்டு சமைக்கும் உணவையே அவருக்கு நைவேத்யம் செய்தும் வழிபட்டு வந்தார்கள்.

ஒருநாள் திடீரெனப் பெய்த மழையினால், சுடுகாட்டில் இருந்த சாம்பல் முழுவதும் கரைந்து விட்டது. ஏனோ அன்று எரிப்பதற்கு பிணங்களும் வரவில்லை. சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்ய சாம்பல் இல்லையே என வருந்திய வெட்டியானும், செய்வதறியாது, நன்றாகச் சிந்தித்து கட்டைகளை அடுக்கி தீயை மூட்டிவிட்டு தனது மனைவியிடம் "நான் இந்த தீயில் விழுகிறேன். என் உடல் எரிந்து கிடைக்கும் சாம்பலைக் கொண்டு சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்" என்று கூறினான்.

ஆனால் மனைவியோ 'நீங்கள் அப்படி இறந்து விட்டால் இங்குவரும் பிணங்கள் சீரழிந்துவிடும், எனவே நானே தீயில் குதிக்கின்றேன்' என்று கூறிக்கொண்டே கண்ணிமைக்கும் பொழுதில் எரிந்து கொண்டிருந்த தீயில் வீழ்ந்தாள். கணவன் அவளைத் தடுக்க முயற்சிப்பதற்குள் தீயில் பாய்ந்து விட்டாள்.

அக்கணமே சுவாலை விட்டு எரிந்து கொண்டிருந்த அந்த நெருப்பு பூவாக மாறி விட்டது. பூஜைக்காக உயிரையும் தரத்துணிந்த அவளுக்கு, சிவன் அம்பிகையுடன் காட்சி தந்தார். "பெண்ணே! என் மீதுள்ள பக்தியாலும், உன் கணவன் மீதுள்ள அன்பாலும் தீக்கு இரையாகத் துணிந்தாயே! சிவபூஜை செய்வதையே கடமையாகக் கொண்ட உனக்கும் உன் கணவனுக்கும் எம் பூரண ஆசிகள்! அள்ள அள்ளக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையாத சுடுகாட்டு சாம்பல் கலசத்தையும் அமுத கலசத்தையும் தருகிறேன். எதுவிதகுறையுமில்லாது மனம் விரும்பியபடி, நீங்கள் இன்னும் பலகாலம் நித்யபூஜை செய்து வளமோடு வாழ்ந்து சிவலோகம் அடைவீர்களாக!" என்று அருள்புரிந்தார்.

ஆச்சரியத்தில் அவர்களுக்கு வார்த்தை ஏதும் வரவில்லை. வழக்கம் போல், வெட்டியானும், அவன் மனைவியும் சிவபூஜையை தொடர்ந்து செய்து பிறவாநிலையை அடைந்தனர்.

இதைக் கேள்வியுற்ற அரசனும் தங்கத்தால் ஆன சிவலிங்கத்திற்குப் பன்னீர், பஞ்சாமிர்தம் மற்றும் வாசனைத் திரவியங்களாலும் அபிஷேகம் செய்த எனக்கு காட்சிதராத இறைவன், சுடுகாட்டுச் சாம்பலையும், பிணத்துக்கு இடும் வாய்க்கரிசியில் சமைத்த சோற்றையும் கொடுத்தவனுக்கு காட்சியளித்து மோட்சம் அளித்துள்ளாரே என்று வருந்தி தனது முதன் மந்திரியிடம் விளக்கம் கேட்டான்

முதன்மந்திரி 'பக்தி' என்பது ஆடம்பரத்தில் இல்லை அன்பினால், மனத்தினால் மட்டுமே மலரக்கூடியது என்று கூறியதை அரசன் ஏற்று தனது நிலையை எண்ணி வெட்கித் தலைகுனிந்தான்.



(மூலம்: இணையம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. சோதனை



பூட்டுக்கள் ஒருபோதும் திறப்பின்றி
உற்பத்தி செய்யப்படுவதில்லை..
அதே போல் தான் கடவுளும்
தீர்வுகள் இன்றி பிரச்சனைகளைக்
கொடுப்பது இல்லை.. .. ..
நாங்கள்தான் அவற்றைத் திறக்க
பொறுமையைக்
கடைப்பிடிக்கின்றோம் இல்லை.. ..

**நல்லாற்றாள் நாடி அருளாள்க பல்லாற்றால்**
**தேரினும் அஃதே துணை** *(அருளுடைமை -242)*



[நல்லநெறியில் வாழ்ந்து, நமக்கு உதவும் அறம் எதுஎன ஆய்ந்து, அருளுடன் வாழ எல்லாச் சமய நெறிகளால் ஆய்ந்தாலும் அருளே நமக்குத் துணையாகும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனை

கப்பல் ஒன்று கடலில் வழிதவறி செல்லும்போது புயலில் சிக்கி மூழ்கிவிடுகிறது. அதில் ஒருவன் மட்டும் எப்படியோ தப்பி அருகிலுள்ள யாருமற்ற தீவில் கரையேறுகிறான்.

“இறைவா... இங்கிருந்து எப்படியாவது என்னை தப்பிக்க வைத்துவிடு. ஆள் அரவமற்ற இந்த தீவில் எத்தனைநாள் தான் நான் தனியே இருப்பது? என் மனைவி மக்களைப் பார்க்கவேண்டாமா.?” என்று பிரார்த்தித்தான்.

ஏதாவது ஒரு ரூபத்தில் தனக்கு உதவிக்கரம் நீளும் என்று தினசரி எதிர்பார்த்து எதிர்பார்த்துக் காத்திருந்து ஏமாந்து விடுகிறான். எதுவும் உதவி கிடைத்தபாடில்லை.

தன்னைக் காத்துக்கொள்ள, அத்தீவில் கிடைத்த பொருட்கள், மற்றும் கப்பலின் உடைந்த பாகங்கள் இவற்றைக் கொண்டு சிறிய குடிசை ஒன்றைக் கட்டினான்.

இப்படியே சில நாட்கள் கழிந்தன. அவன் பிரார்த்தனையை மட்டும் விடவில்லை. கடவுள் ஏதாவது ஒரு ரூபத்தில் தனக்கு நிச்சயம் உதவுவார் என்று தன்னைத் தேற்றிக் கொண்டான்.

ஒரு நாள் அவன் உணவு தேடுவதற்காக வெளியே சென்றுவிட்டுத் திரும்புகையில், அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிட வைத்தது. அவன் தீவில் தங்குவதற்கென்று அமைத்து இருந்த ஒரே குடிசையும் வானுயர எழும்பிய புகையுடன் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது.

அதைப் பார்த்து அவன் அலறித் துடித்தான். எல்லாம் போய்விட்டது. அவனிடமிருந்த மிச்ச சொச்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பொருட்களும் போய்விட்டன. "இறைவா... என்னைக் காப்பாற்றும்படி தானே உன்னை மன்றாடினேன். நீ இருப்பவற்றையும் பறித்துக் கொண்டாயே... இது தான் உன் நீதியோ?.." என்று தேம்பித் தேம்பி அழுதான்.

அன்று இரவு தீவின் வெட்டவெளியில் அயர்ந்து உறங்கிய அவனை, மறுநாள் காலை ஒரு கப்பலின் சப்தம் எழுப்பியது. இவன் தீவை நோக்கி அது வந்து கொண்டிருந்தது. "அப்பாடா... நல்ல வேளை... ஒரு வழியாக இங்கிருந்து தப்பித்தோம். யாரோ நம்மைக் காப்பாற்ற வருகிறார்கள்." என்று துள்ளிக் குதித்தான்.

கப்பல் சிப்பந்திகள் அவனை, உயிர்காக்கும் படகில் (லைஃப் போட்டில்) வந்து அழைத்துச் சென்றார்கள். அவர்கள் "தீவில் ஏதோ பற்றிஎரிந்து புகை எழும்பியதைப் பார்த்து யாரோ தீவில் கரைஒதுங்கி காப்பாற்ற வேண்டித்தான் அறிவிப்பு (சிக்னல்) கொடுக்கிறார்கள் என்று நினைத்தோம்" என்றார்கள். அப்போதுதான் இறைவன் குடிசையை எரித்த காரணம் அவனுக்குப் புரிந்தது. இறைவனுக்கு நன்றி சொன்னான்.

வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் நாம் இப்படித்தான் இறைவனை அவசரப்பட்டு தவறாக எடைபோட்டு விடுகிறோம். பொறுமையைக் காக்கத் தவறிவிடுகின்றோம்.

நம்மைக் காக்கவே எப்போதும் காத்திருக்கிறான். சோதனை என்றால், அவன் அருட்பார்வை எம்மீது விழுந்து விட்டது.. விரைவில் நல்லது நடக்கும் என்று நம்புங்கள்...



(மூலம்: இணையம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. வீலை



இறைவனிடம் வரம் கேட்டேன்..
நான் 'எல்லோருக்கும் பிடித்தமாதிரி
இருக்க வேண்டும்' என்று.. ..
அவர் சிரித்தபடி சொன்னார்..
'எனக்கே அந்த வரம் இதுவரை
கிடைக்கவில்லை' என்று .. ..

**வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.** (*-கடவுள்வாழ்த்து-4*)



[எதிலும் விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளை மனத்தால் எப்போதும் நினைப்பவருக்கு உலகத் துன்பம் ஒருபோதும் இல்லை]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விலை

ஒரு ஏழை பக்தன்.. கோவிலில் நடைபெறுவதை மிக அவதானமாகக் கண் இமைக்காது கவனித்துக் கொண்டிருந்தான்.

மனம் பொறுக்கமாட்டாது திடீரென ஒரு கேள்வியை இறைவனிடம் கேட்டான்.. காசில்லா ஏழைப் பக்தனுக்கு தூரத்திலும், வசதிவாய்ப்புள்ள பகட்டான மனிதனுக்கு மிக அண்மையாக அருகிலும் காட்சி அளிக்கிறாயே இறைவா..! இது நியாயமா?..

கலகலவென சிரித்தான் இறைவன்..

தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை என்றேன் நீங்கள் தாயை வணங்கவில்லை..

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்றேன் நீங்கள் கேட்கவுமில்லை.. ..அதன்படி நடக்கவுமில்லை.. .. ..!

தூணிலும் இருக்கிறேன் துரும்பிலும் இருக்கிறேன் என்றேன் நீங்கள் நம்பவில்லை.. பாரிய கட்டடங்களைக் கட்டுகிறீர்கள்.. என்னைத் தேடி ஊர் ஊராகத் திரிகின்றீர்கள்.. ..

ஏழைகளுக்கு உதவுங்கள்.. அது எனக்கே செய்வது என்றேன். நீங்கள் கணக்கில் எடுக்கவுமில்லை.. செய்யவும் இல்லை.. .. ..!!

எனக்கான இடத்தை,

எனக்கான நேரத்தை,


எனக்கான விழாக்களை,

என்னை வணங்கும் முறையை,

எல்லாம் நீங்களே முடிவு செய்தீர்கள்.....!!!

இப்போது எனக்குக் கட்டணத்தையும் வைத்து என்னைக் காட்சிப்பொருளாக்கி விட்டு.. இப்பொழுது என்னையே கேட்பது எந்த வகையில் நியாயம் என்றான் இறைவன்.

அந்த ஏழைப் பக்தனுக்கு தலைசுற்றியது.. ..!!!!



*(மூலம்: இணையம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. கல்லும் மண்ணும்




**உண்மையான நட்புக் கிடைப்பது**
**மிக மிகக் கடினமானது..**
**அதைச் சிறு சிறு காரணங்களுக்காக**
**இழந்து விடாதீர்கள்.. ..**
**அனாதையாகத்**
**தனிமையில் இருக்கும் போதுதான்**
**அதனருமை புரியும்.. .. ..**

**நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு**
**ஒப்பாதல் சான்றோர் கடன்** (*பழைமை--802*)



[நட்பிற்கு உறுப்பாவது நண்பனுடைய உரிமைச் செயலாகும். அந்த உரிமைச்செயலுக்கு உடன்பட்டவராதல் சான்றோரின் கடமையாகும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லும் மண்ணும்

இரண்டு நண்பர்கள் பாலைவனத்தில் பயணித்த போது தண்ணீர் குடிப்பதில் சண்டை வந்தது. ஒருவன் மற்றவனை அடித்து விட்டான். அடிவாங்கியவன், அடி வாங்கி அழுது கொண்டே பாலைவன மணலில், ‘என் நண்பன் என்னை அடித்து விட்டான்” என எழுதி வைத்தான்.

அதன்பின் இருவரும் மௌனமாக நடந்து சென்றனர். பாலைவனத்தில் ஓரிடத்தில் பெரிய பள்ளம் இருந்தது. அதைக் கவனிக்காமல் அடிவாங்கியவன் பள்ளத்திற்குள் தவறி விழப் போனான். அதனைக் கண்டு திடுக்கிட்ட மற்றையவன், தன் உயிரைப் பணயம் வைத்து அவனைக் காப்பாற்றினான்.

இப்போதும் அவன் அருகில் இருந்த பாறையில் ‘என் நண்பன் என்னைக் காப்பாற்றினான்’ எனச் செதுக்கி வைத்தான். காப்பாற்றியவன், ‘அது ஏன் நான் அடித்த போது மணலிலும், காப்பாற்றிய போது பாறையிலும் எழுதினாயே என்று கேட்டான்.

நண்பா “துன்பப் படுத்தியது காற்றில் மறைந்து போகட்டும் என்று மண்ணிலும், நீசெய்த உதவியை மறத்தல் கூடாது என்பதற்காக கற்பாறையிலும் எழுதி வைத்தேன்” என்றான்.

பிறர்செய்யும் தீமைகளை மண்ணில் புதைத்து விடுங்கள். மற்றவர்கள் செய்யும் உதவிகளை இதயப்பாறையில் செதுக்கி வையுங்கள். அது என்றும் அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டியது ஒன்றாகும்.




*(மூலம்: இணையம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. பணக்காரன்



**பணத்தின் மதிப்பு**
**உன்னிடம்**
**இல்லாதபோது தெரியும்..**
**உன்னுடைய மதிப்பு**
**பணம்**
**இல்லாதபோது புரியும்.. ..**

**வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து.** *(ஈகை-221)*



[ஏதும் இல்லாதவர்க்குக் கொடுப்பதே ஈகை பிற எல்லாம் கொடுத்ததைத் திரும்பப் பெறும் நோக்கம் உடையதே.]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணக்காரன்

கணனி (கம்ப்யூட்டர்) உலகின் பேரரசன் பில் கேட்ஸ் இடம் ஒருவர் கேட்கிறார். "உங்களைவிடப் பணக்காரர் எவரும் இருக்கிறாரா?". ஆம். ஒருவர் இருக்கிறார் என்றார் பில் கேட்ஸ்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, நான் வேலைநீக்கம் செய்யப்பட்டேன். நியூயோர்க் நகர விமானநிலையம் சென்றேன். பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளை நான் படித்துக் கொண்டிருந்தேன். தினசரிப் பத்திரிகை ஒன்றினை விரும்பி வாங்கலாம் என நினைத்தேன். ஆனால், என்னிடம் தேவையானளவு பணம் இல்லை. எனவே, பத்திரிகை வாங்கும் எண்ணத்தை விட்டுவிட்டேன். அப்போது, ஒரு சிறுவன், என்னை அழைத்து, அந்த பத்திரிகையின் ஒரு பிரதியைக் கொடுத்தான். என்னிடம் தேவையான பணம் சில்லறை இல்லை எனக் கூறினேன். அவன் பரவாயில்லை, பணம் தேவையில்லை இலவசமாகக் கொடுக்கிறேன் என்றான்.

மூன்று மாதங்கள் கழித்து, நான் அங்கு சென்றேன். மறுபடியும், அதே கதை நடந்தது. இம்முறையும் அதே சிறுவன் நாளிதழை இலவசமாகக் கொடுத்தான்.

நான் வாங்க மறுத்தேன். அவன், அவனுக்கு வந்த அன்றைய லாபத்திலிருந்து தருவதாகக் கூறி கொடுத்தான். ஏறத்தாழ இருபது வருடங்கள் வரையில் கழிந்தன. காலச்சுழற்சியில் நானும் பணக்காரன் ஆகிவிட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சிறுவனைக் காணும் ஆவல் எனக்கு வந்தது. நீண்ட தேடுதலுக்குப் பின் அவனைக் கண்டுபிடித்தேன். அவனைக் கேட்டேன். "என்னைத் தெரிகிறதா?". ஆம் 'தெரிகிறது. நீங்கள் புகழ்வாய்ந்த பணக்காரர் பில்கேட்ஸ்'.

பல வருடங்களுக்கு முன்னால், இரண்டு முறை பத்திரிகைகளை இலவசமாக நீ கொடுத்தாய் எனக் கூறினேன். தற்போது அதற்காக, என்னவெல்லாம் விரும்புகிறாயோ, அவற்றைத் தர விரும்புகிறேன் என்றேன்.

'உங்களால் அதற்கு ஈடு செய்ய முடியாது.' என்றான் அந்த இளைஞன்.. 'ஏன்?' என்றேன். அதற்கு அந்த இளைஞன் 'நான் நீங்கள் ஏழையாய் இருந்த போதுதான் அதை, உங்களுக்குக் கொடுத்தேன் ஆனால், நீங்கள் இப்போ பணக்காரர் ஆன பின்னே எனக்குக் கொடுக்க வருகிறீர்கள். ஆகவே, நீங்கள் எவ்வாறு ஈடு செய்ய முடியும்..?' என்றான். அப்போது அந்த இளைஞன்தான் என்னை விட பெரிய பணக்காரன் என்பதை உணர்ந்தேன்.' என்றார் பில்கேட்ஸ்.

கொடுப்பதற்கு நீ பணக்காரனாக இருக்க வேண்டும் என்பதோ, பணக்காரன் ஆகும் வரை காத்திருக்க வேண்டும் என்பதோ கிடையாது. உதவ வேண்டும் என்ற குணத்திற்கு கால, நேரம் அல்லது ஏழை, பணக்காரன் என்ற பேதம் கிடையாது.



*(மூலம்: இணையம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. பாராட்டு



எதிலும் குறையையே காண்பவர்களுக்கு
எதனையும் ரசிக்கத் தெரியாது..
எதையும் ரசிக்கத் தெரிந்தவர்களுக்கு
எந்தக் குறையும் தெரியாது.. ..
குறைகளைத் தவிர்த்து
நிறைகளை மட்டும் காண்போம் ..
உறுதிகளை வளர்ப்போம்..

**ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்**
**பொன்றாது நிற்பதொன் றில்.** *(புகழ்-223)*



[தனக்கு இணையில்லாததாய், உயர்ந்ததாய் விளங்கும் புகழே அன்றி, அழியாமல் நிலைத்து நிற்கும் வேறொன்றும் இவ்வுலகத்தில் இல்லை]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டு

ஒரு ஆசிரியை தன் வகுப்பு மாணவர்களிடம் வெற்றுத்தாள்களைக் கொடுத்து, ஒவ்வொருவரையும், வகுப்பில் உள்ள மற்ற மாணவர்கள் அனைவரின் பெயரையும் எழுதச் சொன்னார். மாணவர்கள் எழுதி முடித்தவுடன், "ஒவ்வொரு பெயருக்கும் எதிரே, அவர்களிடம் நீங்கள் காணும், அவரிடமுள்ள உங்களுக்குப் பிடித்தவிஷயம் ஒன்றைப்பற்றி எழுதுங்கள்." என்றார்

மாணவர்கள் ஒவ்வொருவரும், யோசித்து, தங்களுக்கு தோன்றியதை எல்லாம் எழுதிக் கொடுத்தனர்.

வாரக்கடைசியில் ஆசிரியை ஒவ்வொரு மாணவனின் பெயரிலும் ஒரு தாள் தயார் செய்து, அதில் மற்ற மாணவர்கள் அவனைப்பற்றி எழுதியிருந்த உயர்வான வார்த்தைகளை மட்டும் தேர்ந்தெடுத்து வரிசையாகத் தொகுத்து எழுதி கீழே தன் கையெழுத்தையும் போட்டு, மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து அவர்களின் பெயரிட்ட தாளைக் கொடுத்தார்.

மாணவர்கள் அவரவர் இடத்திற்கு சென்று அமர்ந்து படிக்கிறார்கள். பத்துநிமிடங்கள் வகுப்பறையே சந்தோஷக்கடலில் மிதக்கிறது.

"நான் இவ்வளவு சிறப்பானவனா..? என்னைப் பற்றி மற்றவர்கள் இவ்வளவு நல்ல அபிப்பிராயம் வைத்திருக்கிறார்களா..?". அத்தனை மாணவர்களும் ஆனந்தத்தில் திளைக்கிறார்கள.

அந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள குணாதிசயங்களை மேலும் மேலும் வளர்த்துக் கொள்ள முயற்சி செய்கிறார்கள். தன்னைப்பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வாகச் சொன்னதற்காக, ஒவ்வொரு மாணவனுக்கும், சக மாணவர்கள் மேல் அன்பு அதிகரிக்கிறது. தன்னம்பிக்கை வளர்கின்றது.

காலம் நகர்கின்றது...

அந்த வகுப்பில் படித்த சரவணன் என்ற மாணவன் ஒருவன் ராணுவத்தில் சேர்ந்து போர் ஒன்றில் மரணம் அடைகிறான். அவன் உடல் ராணுவ மரியாதையுடன், தேசியக்கொடி போர்த்தப்பட்டு சொந்தஊர் கொண்டு வரப்படுகிறது. இறுதிச் சடங்கில், அந்த ஆசிரியையுடன் வகுப்பு நண்பர்களும் கலந்து கொள்கிறார்.

சடங்குகள் முடிந்த பின்னர், சரவணனின் பழைய வகுப்புத் தோழர்கள் தமது பாடசாலைக்கால ஆசிரியையுடன் ஒன்றாக நின்றிருந்தனர். அங்கு சரவணனின் தாயும் தந்தையும் வந்தனர். அந்தச் சோகத்திலும் தந்தை ஆசிரியையிடம் கூறுகிறார். "டீச்சர் நான் உங்களுக்கு ஒன்றைக் காட்ட வேண்டும். இது சரவணன் போரில் கொல்லப்பட்டபோது, அவனது பொக்கெற்றிலிருந்து இறுதியாகக் கண்டெடுக்கப் பட்டது". அவர் காட்டியது, பெரிய பர்ஸ் ஒன்றில் மிகக்கவனமாக, பல முறை மடிக்கப்பட்டு, மடிப்புகள் எல்லாம் டேப் போட்டு ஒட்டப்பட்டு பாதுகாக்கப்பட்ட ஒரு தாள். பல வருடங்களுக்கு முன்னர் அந்த ஆசிரியை சரவணனைப் பற்றிய நல்ல குணங்களை மட்டும் வரிசைப்படுத்தி தொகுத்து எழுதிக் கொடுத்திருந்த அதே காகிதம்..

கண்ணீர்ப் பெருக்குடன் சரவணனின் தாயும், "மிகவும் நன்றி டீச்சர். உங்கள் கடிதத்தை அவன் உயிரையும்விட மேலாக விரும்பினான். மதித்தான்.. இத்தனை வருடங்களும் அதை பத்திரமாக பாதுகாத்து வந்தான். அவனுக்கு வாழ்க்கையில் மிகுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கையும், பிடிப்பும் ஏற்பட்டு நண்பர்களையும் உருவாக்க இந்த காகிதம் தான் உதவியது."

ஆசிரியையும் மற்ற மாணவத் தோழர்களும் சரவணனை நினைத்து கதறி அழுகின்றனர்..,

ஆம், செல்வங்களே., இந்த வாழ்க்கைப் பாதை கரடு முரடானது. எங்கே தொடங்கும், எப்படி இருக்கும், எப்போது, எப்படி முடியும் ? யாருக்கும் தெரியாது. இருக்கின்ற காலத்தில் – நம்முடன் இருப்பவர்களை அவர்களின் நல்ல இயல்புகளுக்காக மட்டுமே நேசிப்போம்.

பாலிலிருந்து நீரை அன்னப்பறவையானது பிரித்தெடுப்பது போல ஒருவரது கெட்டகுணங்களை ஒதுக்கி நல்லகுணங்களை மட்டும் தெரிந்தெடுத்து அதற்காக மட்டுமே அவர்களுடன் நல்லுறவைப் பேணிப் பாராட்டுவோம்.

ஒருவரிடம் உள்ள நற்பண்புகளை, குணங்களை, அநேகமாக நாம் வெளிப்படையாக பாராட்டத் தவறி விடுகிறோம். கூடாது என்றல்ல. அதன் அவசியம் நமக்குத்தெரிவதில்லை. பாராட்ட வேண்டும் என்று தோன்றுவதில்லை!. இந்த உலகில் அனைத்து உயிர்களுமே, பாராட்டுதலை எதிர்பார்க்கிறது. கிடைத்தால் சந்தோஷப்படுகிறது! அதற்கு எவருமே விதிவிலக்கல்ல. நாங்களும் முயற்சிப்போம்.




*(மூலம்: இணையம்)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. பொறுப்பு




**எல்லாம்**
**உனது விருப்பப்படியே நடக்கின்றது**
**என எண்ணிப் பெருமைப்படாதே..**
**நடக்கும் எல்லாவற்றுக்கும்**
**நீதான் பொறுப்பு**
**என்பதனை மறந்து விடாதே.. ..**

**நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த**
**தன்மையான் ஆளப் படும்.** *(தெரிந்துவிளையாடல்-511).*



[நன்மையும் தீமையுமாகிய இரண்டையும் ஆராய்ந்து நன்மை தருகின்றவற்றையே விரும்புகின்ற இயல்பு உடையவன் (செயலுக்கு உரியவனாக) ஆளப்படுவான்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பு

*பாலைவனத்தில்* பயணம் செய்து கொண்டிருந்த ஒருவன் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் மயங்கிவிழும் நிலைக்கு வந்து விட்டான். தாகத்தால் உயிர் போய்விடுமோ என்று நினைத்த போது தூரத்தில் ஒரு குடிசை போல ஏதோ ஒன்று தெரிந்தது. மிகவும் கஷ்டப்பட்டு அவன் அந்த இடத்திற்குச்சென்றான்.

அங்கே ஒரு கையால் அடித்து இயக்கும் பம்ப்பும், அதன் அருகில் ஒரு வாளியில் தண்ணீரும் இருந்தன. ஒரு அட்டையில் யாரோ ஏதோ எழுதி வைத்திருந்தார்கள். ‘வாளியில் உள்ள தண்ணீரை அந்தப் பம்ப் செட்டில் ஊற்றி அடித்தால் தண்ணீர் வரும். குடித்துவிட்டு மறுபடியும் வாளியில் தண்ணீரை நிரப்பி வைத்துவிட்டுச் செல்லவும்.’

அந்தப் பம்ப்போ மிகவும் பழையதாக இருந்தது. அது இயங்குமா, தண்ணீர் வருமா என்பதே சந்தேகமாக இருந்தது. அது இயங்கா விட்டால் அந்தத் தண்ணீர் வீணாகி விடும். உயிர்பிழைப்பதும் அரிது. அதற்குப் பதிலாக அந்தத் தண்ணீரைக் குடித்து விட்டால் தாகமும் தணியும், உயிர் பிழைப்பதற்கு உத்தரவாதமும் உள்ளது.

அவன் யோசித்தான். தண்ணீரைக் குடித்து விடுவதே புத்திசாலித்தனம் என்று அறிவு கூறியது. ஒரு வேளை அதில் எழுதி வைத்திருப்பது போல் அந்தப் பம்ப் இயங்குவதாக இருந்து அது இயங்கத் தேவையான அந்தத் தண்ணீரைக் குடித்து விட்டால், இனித் தன்னைப் போலத் தாகத்தோடு வருபவர்களுக்கு அது பயன்படாமல் போவதற்குத் தானே காரணமாகி விடுவோம் என்று மனசாட்சி வேறு எச்சரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அதற்கு மேல் யோசிக்கவில்லை. நடப்பது நடக்கட்டும் என்றுஅதில் எழுதியிருந்த படியே அந்தப் பம்பில் அந்தத் தண்ணீரை ஊற்றிவிட்டு அதை அடித்து இயக்க ஆரம்பித்தான். தண்ணீர் வர ஆரம்பித்தது. தாகம்தீர, வேண்டிய அளவு தண்ணீர் குடித்து விட்டு அந்த வாளியில் மீண்டும் நீரை நிரப்பி விட்டுச் செல்கையில் அவன் மனம் நிறைந்திருந்தது.

நாம் அவசியமான காலத்தில் அனுபவிப்பதை அடுத்தவருக்கும் அதே போல பயன்படும்படி விட்டுப் போக வேண்டும். எந்த நன்மையும் நம்முடன் நின்று விடலாகாது. இந்தக் கால கட்டத்தில் பெரும்பாலான மனிதர்களிடம் அந்த நல்லெண்ணம் இருப்பதில்லை. எமது தேவை நிறைவேறினால் சரி, அடுத்தவர் எக்கேடு கெட்டால் நமக்கென்ன என்ற அலட்சியம் பலரிடமும் மேலோங்கி உள்ளது.

நாம் வழிகாட்டுதல்களையும் வரைமுறைகளையும் சரிவரப் பின்பற்றி நேர்மையாக நமது பொறுப்புக்களை நடைமுறைப்படுத்தி ஒரு சமூகப் பொறுப்புள்ள நற்பிரசையாக வாழ்வோம்.




*(மூலம்: இணையம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. மேதாவி



ஒருவர்
நம்மைச் சிரிக்க வைப்பதனால் அவர்
கோமாளியும் இல்லை.. ..
அதே சமயம் ஒருவரை
எளிதில் கேலி செய்வதனால்
நாம் மேதாவியும் இல்லை.. ..

**வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க**
**நன்றி பயவா வினை**.( குற்றங்கடிதல்-439)



[எக்காலத்திலும் தன்னை மிக உயர்வாக எண்ணி வியந்து மதிக்கக்கூடாது, நன்மைதராத செயலைத்தான் விரும்பவும் கூடாது.]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதாவி

முருகன் கிணற்றுடனான தோட்டக்காணி ஒன்றை வேலனிடமிருந்து விலைக்கு வாங்கினான். மறுநாள் கடைத்தெருவில் வேலன் நடந்து சென்று கொண்டிருந்தபோது முருகனைச் சந்தித்தான்.

அப்பொழுதே சொல்ல மறந்து விட்டேன். இப்பொழுது உங்களைப் பார்த்த உடன் ஞாபகத்திற்கு வந்தது. நேற்று நான் உங்களுக்கு விற்றது தோட்டத்தில் உள்ள கிணற்றினை மட்டும் தான் அதில் இருக்கும் தண்ணீரை அல்ல. ஆகையினால் அந்த தண்ணீரை நீங்கள் பயன்படுத்த வேண்டுமானால் மாதா மாதம் அதற்கு எனக்கு கட்டணம் செலுத்தவேண்டி வரும் அதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் என்று வேலன் கூறினான்.

அப்பொழுது முருகனும்.. சிறிதும் தயங்காமல் ஆம்.. ஆம்.. நானே உங்களிடம் சொல்ல வேண்டும் என்று தான் இருந்தேன். பரவாயில்லை.. நாங்கள் இப்பொழுது நேரிலேயே சந்தித்தது நல்லதாகி விட்டது.

எனக்கு கிணறு மட்டும் போதும் .. அதில் இருக்கும் உங்கள் தண்ணீர் எனக்கு வேண்டாம். ஒன்று நீங்கள் அதிலிருக்கும் தண்ணீரை அகற்றி வெறும் கிணற்றை மட்டும் எனக்கு கொடுங்கள். இல்லையென்றால் எனக்கு சொந்தமான இடத்தில் தண்ணீரை வைத்திருப்பதற்காக நீங்கள் மாத வாடகை செலுத்த வேண்டி இருக்கும் என்று முருகன் கூறினான்.

இந்தப் பதிலை சற்றும் எதிர்பாராத வேலன் தனது மேதாவித்தனத்தினால் விளைந்ததை எண்ணி வெட்கித் தலைகுனிந்தான்.



*(மூலம்: இணையம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. உள்மனது



**மனச்சாட்சியை**
**வேறு எங்கும் தேடாதீர்கள்..**
**அது உங்களுள்ளே தான்**
**உறைந்து கிடைக்கும்..**
**அதனை உசுப்புங்கள் ..**
**வெளிப்பாடே தடுமாற்றம்.. ..**

**அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்**
**கடுத்தது காட்டும் முகம்.** *(குறிப்பறிதல்--706)*



[தன் அருகே இருக்கும் பொருளின் நிறத்தைக் காட்டும் பளிங்கினைப்போல் ஒருவனது மனத்தே நிகழ்வதை அவன் முகம் காட்டும்.]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்மனது

துமேஷா என்ற நாட்டை, ராகவா என்ற மன்னர் சிறப்பாக ஆண்டு வந்தார். ஒருநாள் அரண்மனையில் விலைமதிப்பற்ற மாணிக்கம் ஒன்று திருட்டுப் போய் விட்டது.

அமைச்சருடன், ஆலோசனையில் ஈடுபட்ட மன்னர், 'நம் அரண்மனையிலேயே, திருடன் தனது கைவரிசையைக் காட்டிவிட்டானே... அவனைப் பிடிக்க, என்ன வழி...' என்று ஆலோசனை கேட்டார். 'மன்னா... நாட்டில் ஒரு அறிஞர் உள்ளார் அவரால், நிச்சயமாகத் திருடனைப் பிடிக்கமுடியும்...' என்றார், அமைச்சர்.

அதன்படியே அறிஞரை அழைத்து வந்து, ஆலோசனை கேட்டனர். 'அரசே... பிடிக்க முடியாத திருடர் என்று, யாருமில்லை கவனக்குறைவாலேயே, நாம் அவர்களைத் தப்பிக்க விடுகிறோம்..' என்றார் அறிஞர்.

நல்லது ஐயா.. எதற்கும் 'கண்டுபிடிக்கும் வழியைச் சொல்லுங்கள்...' என்றார், அரசர்.

'அரசே... நாட்டில் உள்ள திருடர்களை எல்லாம், அரண்மனைக்கு கொண்டு வாருங்கள் அடையாளம் காட்டுகிறேன்...' என்றார் அறிஞர்.

அப்படியே உத்தரவிட்டார் அரசர். நாட்டில், பெயர்பெற்ற திருடர்களைப் பிடித்துவந்து அரசவையில் வரிசையாக நிறுத்தினர். அங்கே வந்தார் அறிஞர், எல்லா திருடர்களையும் உற்றுப் பார்த்தார் அவர் முகம் மலர்ந்தது. அரசே... இதோ திருடனைக் கண்டுபிடித்து விட்டேன்...' என்று உரத்துக் கூறினார் அறிஞர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சரியப்பட்ட மன்னர், 'அறிஞரே.. உண்மையாகவா சொல்கிறீர்கள்.. அந்தக் கயவன் யார்...' என்று கோபத்துடன் கேட்டார். மீண்டும் வரிசையில் பார்வையை ஓட்டிய அறிஞர், 'மாணிக்கம் திருடியவனைத் தவிர, மற்றையோர் செல்லலாம்...' என்றார். அத்தனை பேரும் நடக்கத் தொடங்கினர்.

அப்போது, அறிஞர், 'மற்றவர்களைத்தான் போகச் சொன்னேனே தவிர மாணிக்கம் திருடியவனை அல்ல...' என்றதும், ஒருவன் மட்டும் சிறிதுநேரம் தாமதித்து அதிர்ந்து நின்று, பின் நடந்தான். அறிஞர், அவனைச் சுட்டிக் காட்டி, 'அரசே... அவன் தான் மாணிக்கத்தைத் திருடியவன்..' என்றார்.

வீரர்கள் பாய்ந்து சென்று, அவனை இழுத்து வந்து, மன்னர்முன்பாக கொண்டுவந்து நிறுத்தினர். அவனும் உண்மையை ஒப்புக்கொண்டு மாணிக்கத்தை, மன்னரிடம் ஒப்படைத்தான்.

அவனைச் சிறையில் அடைக்க உத்தரவிட்ட, மன்னர், அறிஞரைப் பாராட்டி, ஏராளமான பொன்னும், பொருளும் பரிசாகக் கொடுத்து அனுப்பி வைத்தார்.

திருடனின் தடுமாற்றத்தை வைத்தே அவனை கண்டுபிடித்ததைப் பார்த்தீர்களா...

தப்புச் செய்தவர்களுக்கு பயமும், திகிலும் எப்போதும் உள்ளேயே இருக்கும்.. உள்மனது எப்பொழுதும் உறுத்திக்கொண்டே இருக்கும்.. எவ்வேளையிலும் தடுமாற்றத்தை ஏற்படுத்தும். நேர்மையாக வாழ்ந்தால் எப்பொழுதும் தைரியமாக இருக்கலாம்.




*(மூலம்: இணையம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. மதிப்பு



ஒரு சோற்றுப் பருக்கையின்
மதிப்பு..
சிதறவிட்ட எமக்குத் தெரியாது...
அதனை எடுத்துச் செல்லும்
எறும்புக்குத்தான்
தெரியும்...

**கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடியுண் டாயினும் இல்.** *(ல்வம்-1005)*



[பிறர்க்கு கொடுத்து உதவுவதும் தான் நுகர்வதும் இல்லாதவர்க்கு மேன் மேலும் பெருகிய பல கோடிப் பொருள் உண்டானாலும் பயன் இல்லை]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்பு

ஆற்றங்கரை ஓரமாக வந்துகொண்டிருந்த வழிப்போக்கன் ஒருவனுக்கு வைரக்கல் ஒன்று கண்ணில்பட்டது. அது வைரம் என்றறியாமல், அதை எடுத்துக்கொண்டு விற்பதற்காக, விலைபோகுமா என்ற சந்தேகத்துடன் கடைத்தெருவுக்கு வந்தான்..

வழிப்போக்கன் கையில் வைரம் இருப்பதைப் பார்த்த வியாபாரி ஒருவன், வழிப்போக்கனை ஏமாற்ற நினைத்து இருபது ரூபாய்க்கு தன்னிடம் அதை விற்குமாறு கேட்டான்.. ஆனால் வழிப்போக்கனோ பேரம் பேசித்தான் பார்ப்போமே என்ற எண்ணத்துடன் இருபத்தைந்துரூபாய் கேட்டான்.. ஐந்து ரூபாய் அதிகம் கொடுக்க விரும்பாத அந்த வியாபாரியும் இருபது ரூபாய்க்கே பேரம் பேசினான்..

இதைக் கவனித்த மற்றொரு வியாபாரி வழிப்போக்கன் கேட்டபடியே இருபத்தைந்து ரூபாய் கொடுத்து அந்த வைரத்தை வாங்கிக்கொண்டு சென்றான்..

இதனைக் கண்டு ஆத்திரமடைந்த முதல் பேரம்பேசிய வியாபாரி, அந்த வழிப்போக்கனைபார்த்து, "அட முட்டாளே! அதன் மதிப்பு பல ஆயிரம் பெறும்... அறிவில்லாமல் விற்றுவிட்டாயே!"என்று திட்டினான்..

அதற்கு அவன், அந்தக் கல்லுக்கு என்னுடைய மதிப்பு அவ்வளவுதான்.. ஆனால் அது வைரம், அதன் மதிப்பு பலஆயிரம் எனத்தெரிந்தும் அதைத் தவறவிட்ட நீதான் மிகப்பெரியமுட்டாள் என்றான்..

சிலர் இப்படித்தான் உண்மையான மதிப்புத் தெரிந்தும், கையில் கிடைத்ததை விட்டுவிட்டுத் தவிக்கிறார்கள்.



*(மூலம்: இணையம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. தீர்மானம்



இருக்குமிடத்தில் இருந்துகொண்டால்
உலகம் உன்னை மதிக்கும்..
உன் நிலைமை கொஞ்சம்
இறங்கி வந்தால்
உன் நிழலும் கூட மிதிக்கும்..

**கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங் கன்ன
வினைபடு பாலால் கொளல்.** *-கூடாவொழுக்கம்-279)*



வடிவால் நேரானது என்றாலும் செயலால் அம்பு கொடியது. சுழுத்தால் வளைந்தது ஆயினும் செயலால் யாழ் இனிது. அதனால் தோற்றத்தால் அன்றிச் செயலால் தான் எடை போடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்மானம்

கடவுள் ஒரு நாள் பூமிக்கு வந்தார். நம் குடிமக்களை பார்த்து பொறாமை கொண்டு, அப்படி என்ன தான் இருக்கின்றது என்று பார்க்க, மதுபானசாலை (பார்) ஒன்றினுள் சென்றார். சரி குடித்துத்தான் பார்த்து விடுவோம் என்றெண்ணி ஒரு போத்தல் தரும்படி கேட்டு வாங்கினார். மட மட என்று ஒரே மூச்சில் குடித்து முடித்தார்..

மீண்டும் ஒருபோத்தல் தரும்படி கேட்டு வாங்கினார். ஒரு வித்தியாசமும் தெரியவில்லை, தொடர்ந்தார். மீண்டும் இரண்டாகக் கொடு.. கேட்டு வாங்கினார். ஒன்றும் ஆகவில்லை. மீண்டும் இரண்டு போத்தல் கொடு.. கேட்டு வாங்கினார், அப்பொழுதும் ஒன்றும் ஆகவில்லை.. கடைக்காரருக்கு ஒரே ஆச்சரியம்.. பொறுத்துப் பார்த்தார்.. கேட்டுத்தான் விடுவோமே என்று ஆச்சரியம் தாளாமல், கேட்டார் ..

'யாரப்பா நீ?.. நானும் தொடர்ந்து கவனித்துக் கொண்டுதான் இருக்கின்றேன். இவ்வளவு குடித்தும் உனக்கு போதை ஏறவில்லையா? மறுபடியும் மறுபடியும் கேட்கின்றாயே..?'. 'அதற்கு கடவுளானவர்.. நான் தானப்பா உங்களை ஆளும் கடவுள். எனக்கு இந்த போதை ஒன்றும் செய்யாது' என்றார். அப்போது கடைக்காரர் இதோ..! தொரைக்கு இப்பொழுது தான் ஏற ஆரம்பித்து இருக்கின்றது போல. நல்லது.. நடக்கட்டும்..! நடக்கட்டும்..! என்றான்

நீங்கள் யாராக இருந்தாலும் இருக்கும் இடத்தைப் பொறுத்தே உங்களை யார் என்பது பற்றி மற்றவர்கள் முடிவு செய்கின்றார்கள்.




*(மூலம்: இணையம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. வாழ்க்கை



வாழ்க்கை மரணத்திடம் கேட்கின்றது
ஏன் மக்கள்
என்னை விரும்புகின்றார்கள்..
உன்னை வெறுக்கின்றார்கள்.. ..
மரணம் சொன்னது ..
ஏனென்றால்
நீ அழகான பொய்.. ..
நான் வலிக்கின்ற உண்மை..

குடம்பை தனித்து ஒழியப் புள்பறந்தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு *(நிலையாமை-338)*



உடம்போடு உயிர்க்கு உள்ள உறவு, தான் இருந்த கூடு தனியே இருக்க அதைவிட்டு பறவை பறந்தாற்போன்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை

ஒரு மனிதன் திடீரென இறந்து போனான்...! அவன் அதை உணரும்போது கையில் ஒரு பெட்டியுடன் கடவுள் அவன் அருகில் வந்தார்...!

வாமகனே.! நாம் செல்வதற்கான நேரம் வந்து விட்டது.! என்று அழைத்தார். இப்பொழுதேயா?. இவ்வளவு சீக்கிரமாகவா?. என்னுடைய திட்டங்கள் என்ன ஆவது?. என்று அந்த மனிதன் மறுத்தான். மன்னித்துவிடு மகனே...! உன்னைக் கொண்டு செல்வதற்கான நேரம் இது..! என்று கடவுள் கூறினார்.

'அந்தப் பெட்டியில் என்ன உள்ளது.?.' என்று மனிதன் கடவுளைக் கேட்டான். 'உன்னுடைய உடைமைகள்தான்' எனக் கடவுள் சாதாரணமாகப் பதிலளித்தார்.. 'என்னுடைய உடைமைகளா..! எனது பொருட்கள், உடைகள், பணம் எல்லாமே இந்தப் பெட்டியில் தான் இருக்கின்றனவா..?' என ஆச்சரியத்துடன் வினவினான். உன்னால் கூறப்பட்ட அனைத்தும் உன்னுடையது அல்ல. அவைகள் பூமியில் நீ வாழ்வதற்கு தேவையானவை..!' என ஏளனத்துடன் கூறினார் கடவுள்.

அப்படியானால் என்னுடைய நினைவுகளா..? என மீண்டும் மனிதன் வினவினான். 'அவை காலத்தின் கோலம்..!' என்றார் கடவுள்..

அப்போ 'என்னுடைய திறமைகளா..?' மனிதன் ஆச்சரியத்துடன் வினவ கடவுள், அவை உன் சூழ்நிலைகளுடன் சம்பந்தப்பட்டவை.! என்றார். அப்படியென்றால் என்னுடைய குடும்பமும் நண்பர்களுமா..? என அந்த மனிதன் கேட்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிக்கவும், குடும்பம் நண்பர்கள் எல்லாம் நீ வாழ்வதற்கான வழிகள்...!' என்றார் கடவுள்.

'அப்படி என்றால் என்மனைவி மற்றும் மக்களா.? என்று மனிதன் வினவ, மனைவியும் மக்களும் உன் சொந்தமானவர்கள் அல்ல.! அவர்கள். உன் இதயத்துடன் சம்பந்தப்பட்டவர்கள். அவ்வளவே!

அப்போ என் உடலா என மனிதன் கேட்க அதுவும் உனக்கு சொந்தமானதல்ல...! உடலும் குப்பையும் ஒன்று...! என்றார் பெட்டியுடன் வந்த கடவுள்.

என் ஆன்மா?. "அதுவும் உன்னுடையது அல்ல...! அது என்னுடையது...!' என்றார் கடவுள். மிகுந்த பயத்துடன் கடவுளிடமிருந்து அந்தப் பெட்டியை வாங்கித் திறந்தவன் வெற்றுப் பெட்டியைக் கண்டு அதிர்ச்சியடைந்தான்.!

கண்ணில் நீர்வழியக் கடவுளிடம், என்னுடையது என்று எதுவும் இல்லையா..? என்று கேட்க, கடவுள் சொல்கிறார்.. ஆம்.. அதுதான் உண்மை..!

நீ வாழ்கின்ற ஒவ்வொரு விநாடி மட்டுமே உன்னுடையது...! வாழ்க்கை என்பது நீ கடக்கும் ஒரு விநாடிதான். ஒவ்வொரு விநாடியையும் சந்தோஷமாக வாழ். எல்லாமே உன்னுடையது என நினைக்காதே.! ஒவ்வொரு விநாடியும் வாழ். உனது வாழ்க்கையை வாழ்...! மகிழ்ச்சியாக வாழ்...! அது மட்டுமே நிரந்தரம்...! மிகுதி அனைத்தும் போலி. உன் இறுதி காலத்தில் நீ எதையும் உன்னுடன் கொண்டு போக முடியாது...! எனவே வாழும் ஒவ்வொரு நொடியையும் மகிழ்வாக வாழ்...!




*(மூலம்: இணையம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. தலைக்கனம்



நீ எவ்வளவு உயர்ந்தவன் என்பது
உன் படிப்பிலோ..
உன் பணத்திலோ அல்லது.. ..
உன் அறிவிலோ அல்ல.. .. ..
உன் நடவடிக்கை எப்படியானது..
மற்றவர்களை நீ எப்படி மதிக்கிறாய்..
என்பதில்தான் தங்கியுள்ளது.. .. ..

**இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்**
**சீரல் லவர்கண் படின்.** *(பெருமை-977)*



[சிறப்பு நிலையானது தனக்கு பொருந்தாத சிறுமைக்குணம் உடையவரிடம் சேர்ந்தால், அவர்களின் செயல்கள் அகங்காரத் தோடு வருவனவாம்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைக்கனம்

எலி ஒன்று வைரவியாபாரி வீட்டிலிருந்து ஒரு வைரக் கல்லினை விழுங்கிவிட்டது.. மிகவும் விலை உயர்ந்த வைரம் அது.

வியாபாரி எலி பிடிப்பவனைப் பார்த்து எப்படியாவது அந்த எலியைப் பிடித்து வயிற்றில் இருக்கும் வைரத்தை எடுக்க உதவ வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்..

எலி பிடிப்பவனும் அதைச் சுடுவதற்காக தன் எலிசுடும் துப்பாக்கியுடன் வந்து விட்டான்.. அப்போது எலி அங்கே இங்கே என்று போக்குக்காட்டி சத்தம்போட்டு ஓடியதில் திடீரென்று ஆயிரக்கணக்கான சக எலிகள் ஒன்று கூடிவிட்டன..

கூட்டம் கூடியதும், திடீரென அந்த ஆயிரக்கணக்கான எலிகளுக்கிடையேயும் ஒருஎலி மட்டும் அந்த எலிக் கூட்டத்தோடு சேராமல் ஒதுங்கி தனித்தே கம்பீரமாக நின்றிருந்தது. இப்போது எலி பிடிப்பவன் தனித்து கம்பீரமாகநின்ற அந்த எலியை குறிவைத்து எலிசுடும் துப்பாக்கியினால் சுட்டான். அந்த எலி மரணித்து விட்டது..

அந்த எலியின் வயிற்றைக் கிழித்து வைரத்தை எடுத்து வைரவியாபாரியிடம் கொடுத்தான்.

எலி பிடிப்பவனைப் பார்த்து வைர வியாபாரி கேட்டான்.. எப்படி இலேசாக அந்த எலியை சரியாக அடையாளம் கண்டுகொண்டாய்..?

அந்த எலி மாத்திரம் மற்ற எலிகளோடு சேராமல் தனியே தனித்தே இருந்தது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமாம்...! அவதானித்தேன்.. என்ன காரணம்? அதைவைத்து எப்படித் தீர்மானித்தாய்..? என்றான்.

அந்த எலி பிடிப்பவன் பதில் சொன்னான்...

இப்படித்தான்... 'பலபேர், திடீர் பணக்காரர்கள் ஆனதும் மற்றவர்களை விட நாம் உயர்ந்தவர் என்ற எண்ணம் கொண்டு, மற்றவர்கள் எம்மைப்பாதுகாக்க ஒன்றுதிரண்டு வந்தாலும் மற்றவர்களுடன் எம்மைச் சேர்க்காமல், தூரத்தில் வைத்துக் கொள்வார்கள்' அதுவே இறுதியில் ஆபத்தில் அவர்களுக்கு உதவாமல் போய்விடுகிறது. என்றான்.

உறவுகளும் அப்படித்தான் சிலர் இடையில் வந்து அழிந்து போகும் செல்வத்தை நம்பி கடவுள் கொடுத்த உறவுகளை அசட்டைசெய்து விட்டு விடுகிறார்கள். ஆயிரம் கோடி செல்வம் இருந்தாலும் சொந்த பந்தமும், நல்லநட்புமே கடைசி வரையில் நம்முடன் இருக்கும்!!




*(மூலம்: இணையம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. மனம்



சூழ்நிலையால் மாறுகின்றவர்கள்
கண்ணீரோடு
மன்னிப்புக் கேட்கின்றார்கள்.. ..
நெருக்கமாகின்றார்கள்
சுயநலத்தால் மாறுகின்றவர்கள்
கோபத்தோடு
தர்க்கம் புரிகின்றார்கள்.. ..
விலகிக்கொள்கிறார்கள்.

**கண்ணோடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல** *(குறிப்பறிதல்–10- 1100)*



கண்களோடு கண்கள் நோக்காமல் ஒத்திருந்து அன்பு செய்யுமானால் வாய்ச்சொற்கள் எவ்வித பயனும் இல்லாமற்போகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனம்

ஒரு துறவி கங்கையில் குளித்துவிட்டுக் கரையேறும் சமயம், அவ்விடத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த வர்கள், சத்தம் போட்டுத் திட்டிக் கொண்டு சண்டைபிடித்துக் கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்த துறவி, தன் சீடர்களிடம் ஏன் மனிதர்கள் கோபத்தில் இருக்கும் போது ஒருவரை ஒருவர் பார்த்து சத்தம்போட்டு சண்டை பிடிக்கிறார்கள்? என்று கேட்டார்.

கோபத்தில் நாம் அமைதியை இழக்கிறோம், அதனால் தான் சத்தமிடுகிறோம் என்றான் ஒருவன். சரி.. ஆனால், உனக்கு மிக சமீபத்தில் இருக்கும் நபரிடம், ஏன் சத்தமிடுகிறாய்?.. அவர்கள் உன் அருகில் தானே நிற்கிறார்கள். நீ சொல்ல வேண்டியதை அவர்களுக்கு மட்டும் கேட்கும் விதமாக எடுத்துரைக்கலாமே என்றார்.

ஒவ்வொரு சீடரும் வெவ்வேறு காரணங்களைச் சொல்கிறார்கள். ஆனால் எந்தக் காரணத்திலும் மற்றவர்களுக்கு உடன்பாடில்லை. கடைசியாகத் துறவி தாமே பதில் கூறுகிறார்.

எப்பொழுது இரு மனிதர்கள், ஒருவர் மீது ஒருவர் கோபம் கொள்கிறார்களோ, அப்பொழுது அவர்கள் இருவரும் அருகிலிருந்தாலும் அவர்களின் மனது இரண்டும் வெகு தொலைவுக்குச் சென்று விடுகிறது. எனவே தூரத்தில் இருக்கும் மனதுக்குக் கேட்க வேண்டும் என்பதற்காகவே, அவர்கள் சத்தமிடுகிறார்கள். மனது எவ்வளவு தூரம் விலகி இருக்கிறதோ, அவ்வளவு தூரம் இவர்கள் தங்கள் ஆற்றலை உபயோகித்து சத்தம்போட வேண்டியிருக்கும். அப்பொழுது தானே தங்கள் கருத்து வெகு தொலைவில் இருக்கும் மனதைச் சென்றடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இதுவே, இரு மனிதர்கள் ஒருவர் மீது ஒருவர் அன்பாக இருக்கும்போது என்ன நடக்கிறது?. அவர்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் சத்தமிடுவதில்லை. அமைதியாகவும், அன்பான முறையிலும் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்து வார்கள். காரணம் அவர்களின் மனது இரண்டும் வெகு சமீபத்திலே இருக்கும். அவர்கள் மனதிற்கு இடையேயான தூரம், மிகக் குறைவாக இருக்கும் அல்லது மனது இரண்டும் ஒன்றோடு ஒன்று இணைந்தே இருக்கும்.

இதைவிடவும் அதிகமாக ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தும்போது என்னநடக்கும்? அவர்கள் ஒருவருக் கொருவர் பேசவேண்டிய தேவை இருக்காது. அவர்களின் மனதுகள் இரண்டும் கிசுகிசுப்பாக பேசுவதில் இருந்தே, அவர்களின் கருத்துகள் பரிமாறப்படும்.

மேலும் அன்பு அதிகமாகும்போது வார்த்தையே தேவைப்படாது. அவர்கள் கண்கள் ஒருவரை ஒருவர் பார்க்கும்போதே, மனதின் எண்ணங்கள் வெளிப்பட்டு விடும்.

துறவி கடைசியாக கூறுகிறார். அதனால் நீங்கள் ஒருவருடன் ஒருவர் வாதிடும்போது, உங்கள் மனதுகள் இரண்டும் தொலைவாகப் போய்விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள் மனதின் தொலைவை அதிகப்படுத்தும் வார்த்தைகளை உபயோகப் படுத்தாதீர்கள். அப்படிச் செய்யாமல் போனால், ஒருநாள் உங்கள் மனங்கள் இரண்டின் தூரம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகி, கடைசியில் ஒன்றுசேரும் பாதையே அடைக்கப்பட்டுவிடும் நிலை வந்துவிடும்... எச்சரிக்கையாயிருங்கள்..




*(மூலம்: இணையம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22. தீர்ப்பு



உங்கள்
அனுமானங்கள் தான் முடிவல்ல..
மற்றவர்களின் பார்வையில்
முற்றிலும்
எதிரானமுடிவு வரலாம்.. ..
முழுதாக சிந்திக்காமல்
முந்திக்கொண்டு
தீர்ப்புச் சொல்லி விடாதீர்கள்.. ..

சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின் *(நடுவுநிலைமை–119)*



[உள்ளத்தில் கோணுதல் இல்லாத தன்மையை உறுதியாகப் பெற்றால், சொல்லிலும் கோணுதல் இல்லாதிருத்தல் நடுவு நிலைமையாகும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்ப்பு


கர்ப்பமாக இருந்த தாய் தன் மகளிடம் உனக்கு தம்பி வேண்டுமா அல்லது தங்கை வேண்டுமா என்று கேட்டாள்... மகள் தம்பி வேண்டும் என்றாள்..

சரி பரவாயில்லை.. யாரைப்போல தம்பி இருக்க வேண்டும் என்று தாய் கேட்க மகள், ராவணனைப் போல் இருக்கவேண்டும் என்றாள்.

திடுக்கிட்ட தாய் உனக்கு என்ன பைத்தியம் பிடித்திருக்கின்றதா... பெரியவர்கள் கூறுவதைப்போல் ராமனைப்போல் சகோதரன் வேண்டும் என்று சொல்லாமல் ராவணனைப் போல் வேண்டும் என்கிறாயே .. இதென்ன விபரீத ஆசை என்றாள்.

அம்மா நான் சொன்னதில் என்ன தவறு.. உடன் பிறந்த சகோதரி அவமானப்பட்டாள் என்பதற்காக ராவணன் தன் அரியணை, ராஜ்ஜியம், உயிர் அனைத்தையும் இழந்தானே.. தன் எதிரியின் மனைவியைச் சிறைபிடித்தபோதும் அவளை ஒருபோதும் தீண்டவில்லையே.. ஆனால் ராமன் யாரோ ஒருவன் சொன்னான் என்பதற்காக கர்ப்பவதியாக இருந்த தன் மனைவியை ஒதுக்கி வைத்தானே.. அவளை தீக்குளித்துத் தன் புனிதத்தை நிரூபிக்கச் செய்தானே.. உனக்கு வேண்டுமானால் ராமனைப்போல் மகன் பிறக்கட்டும். ஆனால் எனக்கு ராவணன் போன்ற சகோதரன் தான் வேண்டும். என்றாள் மகள்.. தாயால் பதில் கூறமுடியவில்லை அதிர்ந்து போனாள்.

ஆம் நாங்கள் அனுமானித்ததன் பிரகாரம் முடிவுகள் எடுத்தலாகாது. நோக்கங்கள், பார்வைகள், இவைகளை அலசி ஆழமாகச் சிந்தித்து முடிவுகளை எடுத்தல் வேண்டும்.



*(மூலம்: இணையம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28. உண்மை



உலகம்
'சொல்பவன் யார்' என்பதை
உள்வாங்குகின்றதே தவிர..
சொல்லப்படும்
'பொருள்'
என்ன என்பதனை அல்ல.. ..
இதுவே நிஜம்..

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு *(மெய்உணர்தல்-355)*



[எப்பொருள் எத்தன்மையதாய்த் தோன்றினாலும் (அத் தோற்றத்தை மட்டும்)கண்டு மயங்காமல் அப்பொருளின் உண்மையான இயல்பை அறிவதே மெய்யுணர்வாகும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை

கவிஞர் கண்ணதாசன் ஒருதடவை ஒரு கல்லூரிக் கவியரங்கத்தில் கலந்துகொண்டு ஒரு கவிதையை வாசிக்க ஆரம்பித்தார். அரங்கத்தில் உற்சாக ஆரவாரம் எழுந்தது. கவிதை வாசிக்கும்போது பலத்த கைதட்டல் எழுந்தது. வானைப் பிளந்தது.

வாசித்து முடிந்ததும் கரவொலி அடங்க வெகுநேரம் பிடித்தது. அப்பொழுது, கண்ணதாசன் சபையில் உரை நிகழ்த்தினார். உங்கள் கரஒலிக்கு மிக்க நன்றி. தற்பொழுது உங்கள் முன் இந்தச் சபையிலே நான் வாசித்த கவிதையின் சிறப்புக்கு உங்கள் கரஒலியே சான்று. தற்பொழுது இந்தக் கவிதை தொடர்பான, நீங்கள் அறியாத ஒரு உண்மையைக் கூற விரும்புகின்றேன்.

இங்கு நான் வாசித்த கவிதை நான் எழுதியது அல்ல. இதற்கு முன்பதாக உங்கள் கல்லூரி மாணவனால் வாசிக்கப்பட்டதே நான் எழுதியது. அந்த மாணவர், நேற்று ஒரு கவிதையினைக் கொண்டு வந்து என்னிடம் காண்பித்தார். அது மிக நன்றாக இருந்தது. எனவே நான் எழுதிய கவிதையை அவரை வாசிக்கச் சொல்லிவிட்டு அவர் எழுதிய கவிதையை நான் வாசித்தேன்.

எனது கவிதையை அவர் வாசிக்கும்போது எந்தவித ஆரவாரமும் இல்லை. அவர் எழுதிய கவிதையை நான்வாசித்தபோது பலத்த வரவேற்பு. இதிலிருந்து தெரிவது என்னவென்றால் சொல்பவன் யார் என்பதையே உலகம் பார்க்கிறதே தவிர, சொல்லும் பொருளைப் பற்றிக் கவலைப் படுவதில்லை என்பதுதான் உண்மை என்பது புரிகிறது.




*(மூலம்: இணையம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. சமயோசிதம்



கற்றவை
அனுபவம் பெற்றவை
கைகொடுக்காத வேளையில்..
சமயோசிதமே
உனக்குக் கைகொடுக்கும்.. ..
இது கற்றதல்ல
காலத்துக்கு ஏற்றது.. ..

நன்றாற்ற லுள்ளுந் தவுறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை. *(தெரிந்துசெயல்வகை-469)*



[அவரவருடைய இயல்புகளை அறிந்து அவரவருக்குப் பொருந்துமாறு செய்யாவிட்டால், நன்மை செய்வதிலும் தவறு உண்டாகும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயோசிதம்

காட்டில் அடைமழை பெய்து கொண்டிருந்தது. வழி தவறிய ஆடு ஒன்று மரத்தின் கீழ் ஒதுங்கி நின்றது. அதனைப் பக்கத்து குகையில் இருந்த நரி கண்டது.

'ஆடு தனியாக இருக்கிறது. மழைவேறு.. பிடித்தால் ஒரு வாரம்வரை உட்கார்ந்து சாப்பிடலாம்' என்று நினைக்கும் போதே நரிக்கு நாவில் நீர் ஊறியது. ஆட்டின் மீது இரக்கம் காட்டுவதுபோல நடித்து குகைக்குள் வரும்போது பிடித்துவிடலாம்' என்று திட்டம் தீட்டி, ஆட்டை அழைத்தது.

'நண்பா, இப்படிக் கொட்டும் மழையில் நனைந்து கொண்டிருந்தால் உடல் என்னாவது? உன்னை நினைத்தால் பரிதாபமாக இருக்கிறது. என் குகைக்கு வா. சற்றுக் கதகதப்பாக, இதமாக இருக்கும். மழை குறைந்தபிறகு நீ செல்லலாம்' என்றது நரி.

ஆட்டுக்குப் பயம் வந்துவிட்டது. இன்றோடு என் வாழ்வு முடிந்தது.. என்று நினைத்தது.

'நண்பா, நீ யோசியாதே.. என் குகைக்குள் வந்தால் உன்னைச் சாப்பிட்டு விடுவேன் என்று பயப்படாதே.. எனக்குப் பசியில்லை.. இப்போது உனக்கு உதவி செய்யவே எண்ணுகிறேன். என்னை நம்பு' என்றது நரி.

மழைவிடும் என்ற நம்பிக்கையும் இல்லை. நரியின் குகைக்குச் சென்று சிறிது நேரம் நனையாமல் இருக்கலாம். ஆனால் அதற்குமுன் நரியிடமிருந்து தப்பிக்கும் வழியை யோசிக்க வேண்டும். ஆடு எண்ணியது. ஆடு துணிந்து குகைக்குள் நுழைந்தது. 'நரியே, உமது பிறவிக்குணம் அறிந்தும் வந்திருக்கிறேன் என்றால் அது என் மீது உள்ள பயத்தினால் தான்!' என்னது... உன் மீது பயமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மீது அல்லவா பயம் வந்திருக்க வேண்டும்!'

'நீ சொல்வது சரிதான். ஆனால் உன்னை நினைத்துப் பரிதாபப்படுகிறேன்.' என்ன உளறுகிறாய்? எனது குகையினுள் நின்று கொண்டு என்னைப் பார்த்துப் பரிதாபப்படுகிறாயா?. சற்று நேரத்தில் உனது கதையை முடிக்கப் போகிறேன். அதுவரை என்னை நீ வேண்டியளவு ஏளனம்செய் என்றது நரி.

'என் கதையைக் கேட்டுவிட்டு, என்னைச் சாப்பிடு.' 'சரி, எனக்கும் பொழுது போகவில்லை. சொல்' என்று அலுத்துக்கொண்டது நரி.

'போன வாரம் காட்டில் மேய்ந்து கொண்டிருந்தபோது அறியாமல் விஷச் செடியைத் தின்றுவிட்டேன். நான் விரைவில் இறந்து விடுவேன் என்று மருத்துவர் கூறிவிட்டார். இன்றே என்னைச் சாப்பிட்டு, என் துன்பத்திலிருந்து விடுவிக்கும் உன்னிடம் இதைச் சொல்லாமல் இருக்க மனம் இல்லை. அதை நினைக்கும்போது வருத்தமாக இருக்கிறது. அதனால்தான் எங்கள் இருப்பிடத்தில் இருக்காமல், காட்டுக்குள் அலைந்து திரிகிறேன்' என்று வருத்தத்தோடு சொன்னது ஆடு.

நரிக்குப் பயம் வந்தது. சற்று நேரம் அமைதியாக இருந்தது. "உன்னைச் செல்லமாக மிரட்டவே உண்ணப் போவதாகச் சொன்னேன். அதிக நேரம் நீ இங்கிருந்தால் நோய் என்னையும் தாக்கிவிடலாம். மழை நின்றுவிட்டது. உடனே இங்கிருந்து கிளம்பு. உடல் நிலையைக் கவனித்துக்கொள்" என்று அக்கறையோடு சொன்னது.

தனது சமயோசிதத்தால் உயிர் தப்பி வந்த ஆடு, ஏமாந்த நரியை நினைத்து விழுந்து விழுந்து சிரித்தது.




(மூலம்: இணையம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25. நேர்மை



உண்மைகள்
கசக்குமென்று
மறைத்துவிடாதீர்கள்..
வெளிப்படுத்தும்
தருணத்தில்
தீர்வுகள்
இனிக்கலாம்.. ..

**நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.** (*-ஒழுக்கமுடைமை- 138*)



[நல்லொழுக்கம் இன்பமான நல்வாழ்க்கைக்குக் காரணமாக இருக்கும் தீயொழுக்கம் எப்போதும் துன்பத்தைக் கொடுக்கும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மை

முன்னொருகாலத்திலே பழமுதிர்சோலை என்ற நாட்டை மன்னன் பழவர்த்தன் ஆண்டு வந்தார். அவர் நீதி நெறி தவறாதவர் வாய்மை நிரம்பியவர் உண்மை பேசுபவர். தன்னைப் போலவே தன் குடிமக்களும் இருக்க வேண்டும் என்று விரும்புபவர். அவருக்கு திருமணமாகி நீண்ட நாட்களாகியும் குழந்தைகள் இல்லை.

தனக்குப் பின் நாட்டை ஆள வாரிசுகள் இல்லாததால், தன் நாட்டுமக்களில் நீதியும், நேர்மையும் தவறாத உண்மையான ஒரு இளைஞனைக் கண்டு பிடித்து மன்னனாக்க வேண்டும் என்று விரும்பினார்.

இதற்காக நாட்டில் உள்ள வீரம்மிக்க, அறிவிற் சிறந்த இளைஞர்களை அழைத்து பலவிதமான போட்டிகள் வைத்து இறுதியில், பத்து இளைஞர்களைத் தேர்ந்தெடுத்தார். அவர்களை மன்னர் அழைத்து, அவர்கள் அனைவரிடமும் தனித்தனியாக ஒரு செடியின் விதைகளைக் கொடுத்து. இந்த விதைகளை ஒரு தொட்டியில் போட்டு வளர்த்து, கவனமுடன் கண்காணித்து, ஆறு மாதம் சென்ற பிறகு, வளர்த்த செடியுடன் என் முன் வர வேண்டும். இதுதான் நான் வைக்கக்கூடிய இறுதிக் கட்டச் சோதனை, என்றார்.

பத்துப் பேரும் அதனை வாங்கிக் கொண்டனர். அதில், சாந்தனு என்ற வாலிபன் ஒருவனும் இருந்தான். எல்லோரும் மன்னர் சொன்னபடி அந்த விதையைத் தொட்டியில் போட்டுச் சிறந்தமுறையில் வளர்க்க ஆரம்பித்தனர். சாந்தனுவும் அப்படியே செய்தான். ஆனால், என்ன காரணத்தினாலோ அவனது விதை முளைத்துச் செடியாகவில்லை. சாந்தனு தன்னிடமுள்ள விதை செடியாக எல்லாவிதமான முயற்சிகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தான். ஆனால், என்ன காரணத்தினாலோ, அந்த விதை முளைக்கவில்லை.

'முளைக்காத விதையை ஒரு வேளை மன்னர் தனக்குத் தந்திருப்பாரோ?' என்று எண்ணினான். 'என்ன மோசமான எண்ணம்... எல்லாருக்கும் கொடுத்தது போலத்தான் எனக்கும் கொடுத்தார். என் விதை முளைக்கவில்லை என்றால், அது என் துரதிருஷ்டம். எதற்கும் ஆறு மாதம்வரை பொறுத்திருந்து பார்ப்போம்... அப்போதும் விதை முளைக்காவிட்டால் மன்னர் என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்வோம், என்று கருதினான்.

ஆறு மாதம் சென்றது. அனைவரும் தொட்டிகளுடன் அரண்மனைக்கு வந்தனர். சாந்தனுவும் முளைக்காத செடியுடன் தொட்டியைக் கொண்டுவந்தான். மன்னர் எல்லாருடைய தொட்டி களையும் பார்த்துக் கொண்டே வந்தார். அவர் இதழ்களுக் கிடையில் புன்முறுவல் ஒன்று நெளிந்தது. சாந்தனுவிடம் வந்ததும் அவன் செடிமுளைக்காத தொட்டியுடன் நிற்பதைக் கண்டவுடன் மன்னர் முகம் மாறியது.

நடுநடுங்கிப் போனான் சாந்தனு. அரசே! தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும். நான் ஆறு மாத காலமாக இந்த விதையைச் செடியாக்க எவ்வளவோ பாடுபட்டேன். முடியவில்லை. என்னை நம்புங்கள் அரசே! என்று மண்டியிட்டுக் கதறினான்.

மன்னர் கீழே குனிந்து அவனைத் தூக்கி நிறுத்தித் தன் மார்போடு அணைத்துக் கொண்டார். இவன்தான் இந்த நாட்டின் எதிர்கால மன்னன் என்றார். இதனைக் கேட்ட அனைவரும் வியப்படைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்மந்திரி எழுந்து, 'அரசே, தாங்கள் சொன்னபடி ஒரு செடி கூட வளர்க்கத் தெரியாத இந்த வாலிபனா எதிர்கால மன்னன்? மன்னருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து செடியைக் கண்ணும் கருத்துமாகப் பராமரிக்காமல் சோம்பேறித் தனமாக இருந்து விட்டு, வெறும் பூந்தொட்டியைக் காட்டிய இவனா இந்த நாட்டு மன்னன்?' என்று கேட்டார்.

'நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டீர்கள். இவன் கூறுவதை நான் முழுமையாக நம்புகிறேன். ஏன் தெரியுமா? நான் கொடுத்த அனைத்து விதைகளும் நன்றாக வேக வைக்கப்பட்ட விதைகள். அதில் எந்தச் செடியும் முளைக்காது.

என்னிடமிருந்து பரிசுகளோ, பதவியோ பெறுவதற்காக மற்றவர்கள் வேக வைக்கப்பட்ட விதைகளைத் தூக்கி எறிந்துவிட்டு, அதற்குப் பதிலாக அதே போன்ற நல்ல விதைகளை வாங்கிச் செடிகளாக்கிக் கொண்டு வந்திருக்கின்றனர். ஆனால் இவன் மட்டுமே விதைமுளைக்காது விட்டாலும், உண்மையை என்னிடம் அறிவிக்கத் தொட்டியுடன் வந்தான். உண்மையைச் சொல்லும்போது என்னால் அவனுக்குத் தண்டனை ஏற்பட்டால் கூட அதைத் தாங்கச் சித்தமாயிருந்திருக்கிறான் என்பதை அவன் செயல், நடத்தை மூலம் அறிந்து கொண்டேன்.

'இப்படி உண்மையாக நேர்மையாக நடந்து கொள்ளும் ஒருவனால் தான் நீதிவளையாது நாட்டைக் கட்டிக்காக்க முடியும். எனவே தான் அவனை மன்னனாக அறிவித்தேன்' என்றார். மன்னரின் அறிவுக் கூர்மையையும் உண்மைக்கும் நேர்மைக்குக் கிடைத்த பரிசையும் எண்ணி அனைவரும் வியந்தனர்.



*(மூலம்: இணையம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. சகிப்பு

## ஒரே கதை இரு முடிவுகள்

## சகிப்பு காய்..



கை தவறினால்
பொருள் உடையுமென்று
யோசிப்பவர்கள்..
வாய் தவறினால்
மனம் உடையுமென்று
யோசிப்பதில்லை.. ..

கூழுங் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு. *(கொடுங்கோண்மை-551)*



[மேல்வருவதை எண்ணாது, தவறாக ஆள்பவன் தன் செல்வத்தையும், செல்வம் தரும் குடிமக்களையும் சேர்ந்தே இழந்துவிடுவான்].



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகிப்பு - காய்

நீண்ட தொலைவில்இருந்து இரண்டுகுடம் தண்ணீர் எடுத்துவந்து, வீட்டின் கதவை இலேசாகத் திறந்து இரண்டுகுடத்தையும் வைத்துவிட்டு, அடுத்த குடம் தண்ணீரைக் கொண்டுவரச் செல்கிறாள் மனைவி.

அந்தநேரம் அவளின் கணவன் மதியச் சாப்பாட்டிற்காக வீட்டுக்கு வருகிறான். நல்ல வெயில். பசிவேறு அவனுக்கு. வெயிலில் வந்ததால் உள்ளே இருந்த குடத்தை கவனிக்காமல் தட்டிவிட்டு விழுந்து விடுகிறான். குடம் உடைந்து இரண்டுகுடம் தண்ணீரும் வீணாகிவிடுகின்றது.

'அவனுக்கு கடுமையான கோபம் வந்துவிடுகிறது. கொஞ்சமாவது அறிவுவேண்டாம்..? இப்படியா வாசலின் முன்னால் தண்ணீர்க் குடத்தை வைப்பது?. வரட்டும் பேசிக்கொள்கின்றேன்' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே இன்னும் இரண்டு குடம் தண்ணீரோடு வந்தாள் மனைவி.

தூக்கிவந்த குடத்தைக்கூட இறக்கவிடாமல் அவளைத் திட்டுகிறான். 'உன்னையெல்லாம் உங்கள் வீட்டில் எப்படித்தான் வளர்த்தார்களோ! உனக்கெல்லாம் மூளையே இல்லையா? என்றவாறு கண்டபடி திட்டுகிறான்.

இதைக்கேட்ட தண்ணீர்க் குடத்துடன் வந்த மனைவிக்கும் கோபம் தலைக்கேறுகிறது. 'நான் எவ்வளவு கஷ்டப்பட்டு எவ்வளவு தூரத்திலிருந்து இந்தத் தண்ணீரைக் கொண்டு வருகிறேன் என்பது தெரியும்தானே..? 'கண்ணை எங்கே வைத்துக் கொண்டு வந்தீர்கள். ஒரு கவனம் வேண்டாம். சீ.. கண்கெட்ட மனிசன் என்று அவள் பேச, இப்படியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருக்கொருவர் பேசி வார்த்தை பெரிதாகி, அவன் அவளை அடித்து விடுகிறான்.

அயல் வீட்டிற்கு விளையாடச்சென்ற குழந்தைகளும் இந்த சத்தத்தினைக் கேட்டு ஓடிவந்து அழத்தொடங்கி விட்டார்கள்.

உடனே அவள் இனி ஒரு நிமிஷம்கூட உன்கூட வாழமாட்டேன் என்று சொல்லிவிட்டு அவளின் அம்மாவீட்டுக்கு சென்றுவிடுகிறாள்......

(இது கணவன், மனைவிக்குள் ஒருசின்ன பிரச்சனை எவ்வளவு பெரிய முடிவை எடுக்கவைத்துவிட்டது என்பதைக்கூறுகின்றது)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகிப்பு - கனி



அடியே படாமல்
வலிக்கச் செய்வது
வார்த்தைகள் மட்டுமே..
மருந்தே இல்லாமல்
காயத்தைக் குணப்படுத்துவது
அன்பான ஆறுதல் மட்டுமே..

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும் *(இனியவைகூறல்-98)*



[பிறர்க்குத் துன்பம் விளைக்கும் சிறுமையிலிருந்து நீங்கிய இனியசொற்கள் மறுமைக்கும் இம்மைக்கும் வழங்குவோனுக்கு இன்பம் தரும்].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகிப்பு - கனி

(முடிவு இப்படி இருந்தால் எப்படி இருக்கும்?.)

அவன் குடம்தடுக்கி விழுந்து, தண்ணீரை ஊற்றிவிட்டான்.எழுந்து பார்த்தான். அடடா இப்படிக் கவனிக்காமல் இரண்டுகுடம் தண்ணீரையும் அநியாயமாக வீணாக்கி விட்டோமே.. என எண்ணிக் கவலைப்பட்டான்.

ம்..! பாவம் அவள். தண்ணீர் எவ்வளவு தூரத்தில் இருந்து கொண்டுவருகிறாள்.. எவ்வளவு சிரமப்பட்டிருப்பாள். முதல்வேலையாக அவள் வந்தவுடன் மன்னிப்புகேட்டுவிட்டு நானே போய் இரண்டுகுடம் தண்ணீர் எடுத்துவந்து கொடுக்க வேண்டும் என நினைத்துக் கொண்டிருக்கும்போது அவள் தண்ணீரோடு வருகிறாள்.

இவன் ஓடிப்போய் அந்தக்குடங்களை இறக்கியவாறு நடந்ததைச் சொல்லி, நான் கவனிக்காமல் குடத்தின் மேல் விழுந்து தண்ணீரை ஊற்றி விட்டேன். நீ எவ்வளவு தூரத்தில் இருந்து எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த தண்ணீரைக் கொண்டுவருகிறாய் என்னை மன்னித்துவிடு. கொடு.. நான்போய் தண்ணீர் கொண்டுவருகிறேன் என்கிறான்.


உடனே அவள் பதறுகிறாள். ஐயையோ விழுந்து விட்டீங்களா?.. உங்களுக்கு ஒன்றும் ஆக வில்லையே? தண்ணீர்போனால் போகட்டும். நீங்கள் என்ன வேணுமென்றா விழுந்தீர்கள்.. தெரியாமல் தானே.. அவசரத்தில் வாசலில் தண்ணீரை வைத்தது என்தப்பு. நான் போய் எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் வாருங்கள் சாப்பிடுவோம்.. பாவம் நல்ல பசியோடு வந்திருப்பீர்கள்.. பசிக்களை.. என்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அவன் அப்படியே நெகிழ்ந்துபோகிறான். அவள்மேல் அவனுக்கு இன்னும் அளவுகடந்த பாசம் பொங்கிவழிகின்றது.

அயல் வீட்டிற்கு விளையாடச்சென்ற குழந்தைகளும் இவர்களது சிரிப்பொலியைக் கேட்டு ஓடிவந்து அப்பா வந்திட்டார்.. அப்பா வந்திட்டார் என்று குதூகலத்துடன் பெற்றாரைக் கட்டி அணைத்தார்கள்.



ஆம்! யாரும் தெரிந்து தப்பு செய்வதில்லை. இருவரில் ஒருவர் ஒருபடி இறங்கினால், மற்றவர் கண்டிப்பாக பத்துப்படி இறங்கிவருவார். !

புரிதலும், விட்டுக் கொடுத்தலுமே வாழ்க்கை. குடும்பத்தில் கணவன் மனைவி இருவருக்கும் இடையில் இருக்க வேண்டிய சகிப்புத் தன்மை முழுக் குடும்பத்தினதும் குதூகலத்திற்கு அத்திவாரமாக அமைகின்றது..!!





*(மூலம்: இணையம்)*



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 27. பொருள்




தமிழ்
இது அமிழ்தினும் இனியது..
ஒரு தவறே
அந்த அமிழ்தையும்
நஞ்சாக்கி விடும்..
எதையும் தெளிவாகத்
தெரிவிக்க வேண்டும்.. ..

**எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்**
**நுண்பொருள் காண்பது அறிவு.** *(அறிவுடைமை-424)*



தான் சொல்லுவன எளிய பொருளையுடையனவாகப் பதியுமாறு சொல்லி, தான் பிறரிடம் கேட்பவற்றின் நுட்பமானப் பொருளையும் ஆராய்ந்துகாண்பதேஅறிவாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருள்

வயது முதிர்ந்த ஒருபாட்டி சாலையோரத்தில் அப்பக்கடை நடத்திவந்தாள். காலையில் அவள் கடையில் கிடைக்கும் அப்பம் மிகமிக ருசியானதாக இருக்கும். அந்தச் சுவையான அப்பத்திற்கென்றே காலையில் பெருங்கூட்டம் கூடும். கடைக்கு வரும் அனைவரும் அதனை விரும்பிக் கேட்டுவாங்கி உண்பர். அத்துடன் அப்பத்துக்குச் சர்க்கரையும் பாலும் சேர்த்துச் சாப்பிடக் கொடுப்பாள். அது மேலும் ருசியாக இருக்கும்.

திடீரென சர்க்கரை விலை சந்தையில் கூடியது. அப்பம் தற்போது விற்கும் விலைக்குச் சர்க்கரை கொடுப்பது அப்பாட்டிக்குச் சற்றுச் சிரமமாக இருந்தது. அதிகவிலை கொடுத்துச் சர்க்கரை வாங்கினாலும், அப்பத்தின் விலையைக் கூட்ட அவள் விரும்பவில்லை. எனவே, அப்பத்திற்குச் சர்க்கரை இல்லை எனக் கூற விரும்பினாள்.

கடைக்கு வழக்கமாக வந்து சாப்பிடும் ஒருவரை அழைத்து. 'அப்பத்துக்குச் சர்க்கரை இல்லை' என அறிவிப்பு அட்டை ஒன்றை எழுதிவரச் சொன்னாள். அவர் அதன் அடிப்படையில் 'இன்று முதல் அப்பத்துக்குச் சர்க்கரை இல்லை' என ஓர் அறிவிப்பு அட்டை எழுதி வந்தார். அம்மூதாட்டியும் அதனைக் கடையில் தொங்கவிட்டாள்.

காலையில் சாப்பிடவந்த ஒருவர் ஓர் அப்பம் வாங்கிச் சாப்பிட்டார். சர்க்கரை இல்லாமலே சாப்பிட்டார். இரண்டாவதாக ஓர் அப்பம் கேட்டார். அவள் இரண்டாவது அப்பம் கொடுத்தாள். அவர் "அம்மா! அப்பத்துக்கு சர்க்கரையைக் கொடு" எனக் கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டியோ "அறிவிப்புப் பலகையைப் பார்த்தீர்களா?" என்று கேட்டாள். அப்பம் வாங்கியவர் "பார்த்தேன்! படித்தேன்! அதன் பின்புதான் சர்க்கரை கேட்டேன்" என்றார்..

"அதைப் படித்துவிட்டுமா கேட்கிறீர்?" என்றாள் பாட்டி.

"ஆமாம்...

அறிவிப்பு அட்டையில் என்ன எழுதி இருக்கிறது? 'இன்று முதல் அப்பத்துக்குச் சர்க்கரை இல்லை' என்றுதானே எழுதியிருக்கிறது. இரண்டாவது அப்பத்துக்குத் தானே நான் சர்க்கரை கேட்கிறேன்" என்றார்.

"ஐயா! அப்படியா பொருள் கொள்கிறீர்கள்? சரி! உங்களுக்கு இன்று சர்க்கரை கொடுத்து விடுகிறேன். மன்னித்துக் கொள்ளுங்கள் என்று கூறினாள்.

அறிவிப்பு அட்டை எழுதியவரை அழைத்தாள். ஐயா, எழுதிய அட்டையில் இடைவெளியின் இடமாற்றத்தால் வந்த பொருள் மாற்றத்தைப் பார்த்தீர்களா.. எனவே பொருளைச் சரியாக அனைவரும் விளங்கிக்கொள்ளத் தக்கதாக அறிவிப்பு அட்டையில் "அப்பத்துக்கு இன்றுமுதல் சர்க்கரை இல்லை" எனத் தெளிவாக எழுதிவிடுங்கள் என்றாள்.

அந்த நாள் முதல் எதுவிதபிரச்சினையுமின்றி சர்க்கரை இன்றியே அப்பத்தை வழமைபோல் விற்கத் தொடங்கினாள்.




(மூலம்: இணையம்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 28. புகழ்




எப்பொழுது நாம்
பதவியையும்,
புகழையும்
இழக்கின்றோமோ
அடுத்த நொடியே
நாம் ஒதுக்கப்படுவோம்..

**கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அதுவிளிந் தற்று.** *(நிலையாமை-332)*



[பெரிய செல்வம் வந்து சேர்தல், கூத்தாடும் இடத்தில் கூட்டம் சேர்வதைப் போன்றது, அது நீங்கிப் போதலும் கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவதைப் போன்றது].



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகழ்

நடிப்பில் படிப்படியாக உயர்ந்து கலிபோர்னியாவின் கவர்னர் என்ற புகழின் உச்சத்தில் இருக்கும் பொழுது தன்னுடைய வெண்கலச் சிலை முகப்பில் நிறுவப்பட்ட வகையில் ஒரு ஆடம்பர ஹோட்டலை புகழ்பெற்ற ஹாலிவுட் ஹீரோ (Arnold Schwarzenegger) அர்னாலடு ஸ்குவாஸ்னேக்கர திறந்து வைத்தார்.

ஹோட்டலின் திறப்பு விழாவின் பொழுது அந்த ஆடம்பர ஹோட்டலின் உரிமையாளர் 'அர்னால்டு எப்பொழுது வேண்டுமானாலும் இந்த ஹோட்டலுக்கு வந்து முன் பதிவு ஏதும் இன்றி இலவசமாக தங்கிக்கொள்ளலாம், அவருக்கு எப்பொழுதுமே ஒரு அறை இருக்கும்' என்று அறிவித்தார்

நாட்கள் நகர்ந்தன ...

பதவி போனது ..

புகழ் போனது ..

சமீபத்தில் சாதாரண மனிதனாக அந்த ஹோட்டலுக்கு சென்ற அர்னால்டுக்கு அதிர்ச்சி காத்திருந்தது

ஹோட்டலில் எல்லா அறைகளும் பதிவு ஆகிவிட்டது தற்பொழுது அறைகள் ஏதும் இல்லை என்று ஹோட்டல் நிர்வாகம் கூறவே அதிர்ச்சியில் உறைந்து போனார் ஹாலிவுட் முன்னாள் ஹீரொ, கலிபோர்னியா முன்னாள் கவர்னர், அந்த ஹோட்டலை திறந்து வைத்த முன்னாள் வி.ஐ.பி 'அர்னால்டு ஸ்குவாஸ்னேக்கர்'.

மனமுடைந்த அர்னால்ட், தான் வைத்திருந்த போர்வையை எடுத்துக்கொண்டு அந்த ஹோட்டலின் முகப்பில் தன்னால் திறந்து வைக்கப்பட்ட, வெறும் அலங்கார பொருளாக நின்று கொண்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய வெண்கலச் சிலைக்கு முன்னர் செய்வதறியாது படுத்து விட்டார்

இந்த சம்பவத்தால் துவண்டு போன அர்னால்ட் அந்த காட்சியை புகைப்படம் எடுத்து வலைதளத்தில் பதிவிட்டு உலகத்திற்கு ஓர் செய்தியை சொல்கின்றார்

' நாம் பதவியில் இருக்கும் பொழுது மெச்சப்படுவோம், புகழப்படுவோம், நமக்கு உச்சபட்ச மரியாதை தரப்படும்'

எப்பொழுது நாம் பதவியையும், புகழையும் இழக்கின்றோமோ அடுத்த நொடியே நாம் ஒதுக்கப்படுவோம்,

நமக்கு தந்த சத்தியங்கள் காற்றில் பறக்கவிடப்படும்'. எந்த சத்தியங்களும், வாக்குறுதிகளும் உங்களுக்காக கொடுக்கப்பட்டது அல்ல அது உங்களை அலங்கரித்த பதவிக்கு கொடுக்கப்பட்டது'

'உங்கள் புகழை, உங்கள் பதவியை, உங்கள் அதிகாரத்தை ஒரு போதும் நம்பாதீர்கள்' .




*(மூலம்: இணையம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29. அறிவு



சலித்துக் கொள்பவன்
ஒவ்வொரு வாய்ப்பிலும் உள்ள
ஆபத்தைப் பார்க்கிறான்..
சாதிப்பவன் ஒவ்வொரு ஆபத்திலுமுள்ள
வாய்ப்பினைப் பார்க்கிறான்.. ..

**அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்.** *(ஆள்வினையுடைமை -611)*



இது செய்வதற்கு அருமையாகாது என்று சோர்வுறாமல் இருக்க வேண்டும்,அதைச்செய்வதற்குத் தக்க பெருமையை முயற்சி உண்டாக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவு

நடுக்கடலில் சென்று கொண்டிருந்த ஒரு பெரிய கப்பலின் யந்திரம் செயலிழந்ததால் அந்தக் கப்பல் அங்கிருந்து நகர முடியாமல் தத்தளித்தது. கப்பல் இயந்திரங்களை பழுது பார்ப்பதில் பிரசித்தி பெற்ற பொறியியலாளர்களும், மெக்கானிக்குகளும் வந்து சேர்ந்தனர். ஒருவர்மாறி ஒருவராக அதைச் சீரமைக்க பல்வேறு வழிமுறைகளைச் செய்து பார்த்தனர் எந்தப் பலனுமில்லை. அவர்களின் முயற்சிகள் அத்தனையும் விழலுக்கு இறைத்த நீராகிப் போனது. இறுதியாக வயதான அனுபவசாலி மெக்கானிக்கைத் தேடிக் கண்டுபிடித்து கப்பலுக்கு அழைத்து வந்தனர்.

கப்பலுக்குள் சென்ற அவர், என்ஜினை ஒருமுறை முழுமையாக தனது எக்ஸ்ரே கண்களால் அலசினார். தன்னுடன் கொண்டு வந்திருந்த பெரிய கைப்பையை திறந்து அதில் கிடந்த கருவிகளில் ஏதோ ஒன்றை வெகு நேரமாக தேடினார்.

கப்பலின் உரிமையாளர்கள் அவருக்கு மிக நெருக்கமாக நின்றவாறு, ‘இந்த வயதான முதியவர் என்ன செய்து கப்பலை இங்கிருந்து நகர்த்தப் போகிறார்?’ என்பதை ஆவலுடனும் ஆச்சரியத் துடனும் கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

தனது பையில் இருந்து ஒரு சிறிய சுத்தியலை எடுத்து, யந்திரத்தின் ஒரு பகுதியில் ஒரேயொரு முறை லேசாக தட்டினார். இப்போது இயந்திரத்தை இயக்கிப் பாருங்கள் என்று கூறியவாறு தனது கருவிகளை எல்லாம் எடுத்து கைப்பையில் போட்டுக் கொண்டிருந்தபோதே, கப்பலின் இயந்திரம் இயங்கத் தொடங்கியது.. அவரது அபார திறமையைக் கண்டு வியந்துபோன கப்பல் உரிமையாளர்கள்அவரை கைகுலுக்கிப் பாராட்டி வழியனுப்பி வைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்கள் கழித்து அந்த முதியவரிடம் இருந்து கப்பல் உரிமையாளர்களுக்கு ஒரு கடிதம் வந்தது. கடிதத்துடன் கப்பலின் பழுதைத் திருத்தியதற்கான பில்லும் இணைக்கப்பட்டிருந்தது.

பில்லில் குறிப்பிடப்பட்டிருந்த தொகையைக் கண்ட கப்பல் உரிமையாளர்கள் கதிகலங்கிப் போனார்கள். தனது வேலைக்கு பத்தாயிரம் அமெரிக்க டாலர்களை அளிக்க வேண்டும் என்று கடிதத்தில் மெக்கானிக் குறிப்பிட்டிருந்தார்.

இதைக் கண்டு கோபமடைந்த கப்பல் உரிமையாளர்கள், எங்கள் கப்பலை ஓட வைக்க நீங்கள் என்னென்ன 'ஆணியைப் பிடுங்கினீர்கள்'? என்று தெளிவாக விபரமாகப் பட்டியலிட்டு தனியாக ஒரு பில்லை அனுப்பி வையுங்கள் என்று அவருக்கு ஏளனமாகப் பதில் கடிதம் அனுப்பினர்.

அடுத்த சில நாட்களில் அவரிடமிருந்து வந்த கடிதத்தில் அவர்கள் கேட்டிருந்தவிபரம் முழுமையாக குறிப்பிடப்பட்டிருந்தது. 'சுத்தியலால் தட்டியதற்கு 2 டாலர். எந்தஇடத்தில் தட்டவேண்டும் என்று தெரிந்து தட்டியதற்கு 9,998 டாலர்கள்' என மிகத் தெளிவாக குறிப்பிட்டிருந்தார். முதற்கடிதத்தைப்பார்த்து ஏளனம் செய்தவர்கள், இந்தப் பதிலைக் கண்டதும் திகைத்து மறுப்பெதுவும் இன்றி பத்தாயிரம் டாலர்களையும் அந்த வயோதிபமெக்கானிக்குக்கு அனுப்பி வைத்தனர்.

விடாமுயற்சிகளும், பெருமுயற்சிகளும் சாதனை களுக்கு முக்கியமானவைதான், ஆனால், 'எந்த இடத்தில் எந்த முயற்சி' பலனளிக்கும் என்பதை அறிந்தும், உணர்ந்தும் செய்யப்படும் முயற்சிகளே எமக்கு வெற்றியையும் பலனையும் அளிக்கக்கூடியன.




*(மூலம்: இணையம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30. படிப்பினை



பாடங்கள் தராத
படிப்பினையை
பயணங்கள் நமக்குத் தருகின்றன..
நாம் சந்திக்கும் எல்லா நபர்களும்
எல்லா சந்தர்ப்பங்களும்
நமக்கு ஆசிரியர்களே.. ..
அங்கும் அவர்களிடத்தும்
கற்பதற்கு நிறைய இருக்கும்..

**அருவினை யென்ப உளவோ கருவியான்**
**காலம் அறிந்து செயின்.** *(காலமறிதல்-483)*



[செய்யும் செயலை முடிப்பதற்கு வேண்டிய கருவிகளுடன் ஏற்ற காலத்தையும் அறிந்துசெய்தால் அரியசெயல்கள் (முடியாதவை)உண்டோ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படிப்பினை

ஒரு பணக்காரனுக்கு மிகவும் அழகான மகள் ஒருத்தி இருந்தாள். வளர்ந்தவுடன் அவளுக்குத் திருமணம் செய்து வைக்க முடிவெடுத்து ஊரில் உள்ள தகுதியான இளைஞர்களுக்கு ஒரு போட்டி வைப்பதாகவும், அதில் வெற்றி பெறும் இளைஞனுக்குத்தான் தன் மகளை மணமுடித்து வைப்பதாகவும் அறிவித்தான்.

போட்டி நாள் அன்று, ஊரிலுள்ள வலுவான, திறமையான, புத்திசாலியான இளைஞர்கள் எல்லோரும் கூடினார்கள். சிலர், கையில் கடதாசியும் பேனாவுமாய்,.. சிலர் கையில் கத்தியுடன், சிலர் வீச்சரிவாளுடன், சிலர் துப்பாக்கியுடன்... இப்படியாக!

அவர்களை, அப்பணக்காரன் தன் மிகப்பெரிய நீச்சல் குளத்துக்கு அழைத்துப் போனான். 'இந்த நீச்சல் குளத்தில், இந்த முனையிலிருந்து, எதிர் முனைக்கு முதலில் யாரால் நீந்திக் கடக்க முடிகிறதோ, அவனுக்கு என் மகளைத் திருமணம் செய்து தருவேன்!' என்றான். அவன் சொல்லி முடித்த உடனேயே அனைவரும் நீச்சலுக்குத் தயாராக, வேகமாக உடைகளைக் கழற்ற ஆரம்பித்த பொழுது... 'அது மட்டுமில்லை... கூடவே ஒரு 15 மில்லியன் பணமும், ஒரு தனி பங்களாவும் தருவேன்.. அப்பொழுது தானே, என் அருமை மகள் தன் மணவாழ்வை சுகமாக ஆரம்பிக்க முடியும்!' என்றான்'.

'சரி... உங்கள் எல்லோருக்கும் நல்வாழ்த்துகள்! என் மருமகனை, நான் நீச்சல் குளத்தின் மறு கரையில் சந்திக்கிறேன்' என்றவாறு, அங்கிருந்து நடக்க ஆரம்பித்தான். சொல்லி முடித்தவுடன்... மொத்த இளைஞர்களும், இன்னமும் வேகமாக தண்ணீரில் இறங்க முற்பட்ட பொழுது... அந்தப் பணக்காரனின் உலங்குவானூர்தி (ஹெலிகொப்டர்), அந்த நீச்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளத்துக்கு நேர் மேலே பறந்து வந்து, டசின் கணக்கில் முதலைகளை, அந்தக் குளத்தில் இறக்கி விட்டுச் சென்றது.

அவ்வளவு தான்! அத்தனை பேரும், மரண பயத்தில் உடனே பின்வாங்கி ஏமாற்றத்துடன் மீண்டும் தங்கள் உடைகளை மாற்ற ஆரம்பித்தனர்.

'இதென்ன பைத்தியக்காரத் தனமாக இருக்கிறது? யாரால் இந்த முதலைகளினூடாக நீந்திச்செல்ல முடியும்? பார்க்கலாம்! 'நிச்சயமாக எவனாலும், முடியாது!' என்று தமக்குள் சத்தமாய்ப் பேச ஆரம்பித்தனர்.

அப்பொழுது.. திடீரென்று, ஒருவன் குளத்தில் குதிக்கும் சத்தம் கேட்டது.

அத்தனை பேரும் மூச்சுக் கூட விட மறந்து,.. உச்சபட்ச அதிசயத்தில், அவனையே, கண்ணி மைக்காமல் கவனிக்க ஆரம்பித்தனர்!.

அந்த இளைஞன்,.. மிகவும் லாவகமாக, அத்தனை முதலைகளிலுமிருந்து விலகி விலகி, வேகமாய் நீந்தி, அடுத்த கரையில் ஏறி, வெடவெடவென நடுங்கிக்கொண்டு நின்றான்.

பணக்காரனால், தன் கண்களை நம்ப முடியவில்லை. பிரமாதம்.! நான் தருவதாகக் கூறியவற்றுக்கும் மேலே,.. உனக்கு என்ன வேணுமோ கேள்!. நான் தருகின்றேன்! என்றான் அப்பணக்காரன்.

அந்த இளைஞனோ, இன்னமும் நடுக்கத்திலிருந்து மீளவில்லை! வாய் தந்தியடித்தது, மிரட்சியில் கண்கள் அரண்டு போய் இருந்தன!. பின், ஒருவித வெறியுடன்... 'அதெல்லாம் இருக்கட்டும்... என்னை, இந்தக் குளத்தில் தள்ளி விட்டவனை மட்டும், யாரென்று எனக்குக் காட்டுங்கள்' என்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கதையில் மூலம் நாம் கற்றுக்கொள்ளக் கூடிய படிப்பினைகள்:

1: முதலைகள் இருக்கும் நீரில் தள்ளி விடப்படும் வரை உன் திறமை என்னவென்று, உனக்கே தெரியாது.

2: அந்த ரப்பர் முதலைகள் போன்றே, பிரச்சினைகளும் போலியானவை தான், என்பதும் அவற்றைக் கையாளும்போது புரிய வரும்.

3: உன்னை, முதலைகளுக்குக் காவு கொடுக்க நினைத்தவர்கள் உண்மையில், உன் உள்ளே உறங்கிக்கிடந்த திறமையை வெளிக் கொண்டு வந்து, உன் கனவு எதிர்காலத்தை அடைய உதவியவர்களே. (நன்றி காட்டா விட்டாலும், வன்மம் வேண்டாமே.)

4: சிலவேளைகளில், நாம் மிகவும் மோசமான தருணங்களைக் கடக்கும் பொழுதுதான், நம் முள்ளிருக்கும் நிஜத்திறமை வெளிப்படும்!

5: சிலருக்கு, இம்மாதிரி, அசாத்திய பிரச்சினைகளில் வலுக்கட்டாயமாக தள்ளப்படும் பொழுது மட்டுமே, அவர்களால் வாழ்வின் உயரிய இலக்கை அடைய முடிகிறது.




(மூலம்: இணையம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31. சந்தர்ப்பம்



கடவுள் வரம் எல்லாம்
நிஜத்தில் தரமாட்டார்..
சந்தர்ப்பங்கள்
மட்டும்தான் தருவார்.. ..
அதை வரம் ஆக்குவதும்
சாபம் ஆக்குவதும்
உன்கையில் தான் இருக்கின்றது..

**நில்லாத வற்றை நிலையின என்றுணரும்**
**புல்லறி வாண்மை கடை**.(நிலையாமை-311)



நிலை இல்லாத பொருள்களை நிலையானவை என்று எண்ணும் அற்ப அறிவு இழிவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தர்ப்பம்

ஒரு தவளையைப் பிடித்து தண்ணீரில் போட்டு கொதிக்க வையுங்கள். தண்ணீரின் வெப்பம் அதிகரிக்கும் போது, தவளை தன் உடலை அந்த வெப்ப நிலைக்கு ஏற்ப மாற்றிக் கொண்டே வரும். வெப்பம் ஏற ஏற தவளையும் அந்த வெப்பநிலைக்கு ஏற்ப தன்உடலை அந்த வெப்பத்துக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளும்.

தண்ணீர் கொதிநிலையை அடையும் போது, வெப்பத்தை மேலும் தாங்க முடியாமல் அத்தவளை பாத்திரத்தில் இருந்து வெளியே குதிக்க முயற்சி செய்யும். ஆனால், அந்தச் சந்தர்ப்பத்தில் எவ்வளவு முயற்சி செய்தாலும் தவளையால் வெளியேற முடியாது போய்விடும். ஏனென்றால் வெப்பத்துக்கு ஏற்பத் தன் உடலை மாற்றிக் கொண்டே வந்ததால் அது வலுவிழந்து போய் இருக்கும். இதன்காரணமாக வெளியேற முடியாது சிறிது நேரத்தில் அந்த தவளை இறந்து விடும்.

இக்கதையில் உண்மையிலேயே தவளையின் இறப்புக்குக் காரணமாயமைந்தது எது..?

கொதிக்கும்நீர் தான் அந்த தவளையை கொன்றது என்றுதான் பொதுவாக அனைவரும் கூறுவோம். ஆனால், உண்மை என்னவென்றால், 'எப்போது தப்பித்து வெளியேற வேண்டும் என்று சரியாக முடிவெடுக்காத அந்த தவளையின் இயலாமையே.. கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாமையே அதனது இறப்புக்குக் காரணமாகியது. இதிலிருந்து நாம் அறிவது முதலாவது நாமும் எல்லோரிடமும் சூழ்நிலைக்கு ஏற்ப அனுசரித்து போகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்..... நாம் எப்போது அனுசரித்துப் போக வேண்டும், எப்போது எதிர்கொள்ள வேண்டும் என்பதை அவசியம் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

எம்மை உளரீதியாக, உடல்ரீதியாக, பணரீதியாக மற்றவர்கள் நம்மை நசுக்க ஆரம்பிக்கும் போது, நாமும் சுதாகரிக்காமல் போனால் மீண்டும் அதையே தொடர்ச்சியாகச் செய்ய ஆரம்பிப்பார்கள்.

நாம் எமது உடலில் வலிமை இருக்கும் போதே, அவர்களிடமிருந்து தப்பித்து விடுதல் நன்று. அன்றேல் அவர்கள் தொடர்ந்து மேலும், மேலும் எம்மை நசுக்கிக்கொண்டேயிருப்பார்கள். இறுதியில் எம்மால் மீளமுடியாது போக நாம் இருந்ததையும் இழக்கவேண்டி வரும்.

இதிலிருந்து 'நாம் அனுமதிக்காமல் நம்மை அழிக்க எவராலும் முடியாது.. கிடைத்த சந்தர்ப்பத்தினை சரியான நேரத்தில் பயன்படுத்தத் தவறியமையே எமது அழிவிற்கு காரணமாகின்றது என்பது வெளிப்படை'.




(மூலம்: இணையம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32. நிம்மதி



நிம்மதி
இருந்தால்
நிமிடம் கூட வீணாகாது..
நிம்மதி
இல்லாவிட்டால்
வாழ்நாளே வீணாகி விடும்.. ..
இரந்து கிடைத்தாலும்
கொடுத்தவன் தெய்வமே.. .. ..

கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்நின்று
இரப்புமோ ரேஎர் உடைத்து (இரவு–1053)



ஒளிவு மறைவு இல்லாத மனம் உடையவராய், இது என்கடமை என்று அறிபவர் முன்னே நின்று, ஒன்றை அவரிடம் கேட்பதும் கேட்பவர்க்கு அழகுதான்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிம்மதி

வீட்டுக்கு வெளியே நாய் சத்தம் கேட்டு வெளியே வந்தார் முருகேசர். தனது வீட்டு கேட் முன்பாக நின்று கொண்டு இருந்த உயர்சாதி நாயை அப்போது தான் கவனித்தார் அவர். அது நீண்ட நேரமாக நின்று கொண்டு இருப்பதாகத் தோன்றியது. அவரையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டு இருந்தது அவருக்குச் சற்று வியப்பை தந்தது.

மேலும் ஐந்து நிமிடம் கழிந்தது. முருகேசர் மெதுவாக விசிலடித்து அதனைக் கூப்பிட்டார். உடனே அதுவும் பழக்கப்பட்டதுபோல் நாலுகால் பாய்ச்சலில் ஓடிவந்து அவரருகே நின்றது.

வாஞ்சையுடன் அதன் கழுத்தை தடவிக்கொடுத்தார். பதிலுக்கு அதுவும் அவரது கால்களை நக்கியது. பின்னர் மாடிப்படிக்கு கீழே சென்று படுத்து சுகமாக உறங்கிப் போய் விட்டது.

முருகேசருக்கோ குழப்பம். செல்வந்தருடைய நாய் என்பது அதன் தோற்றம், கட்டியிருந்த பெல்ட், தடியான உடம்பு போன்றவற்றில் இருந்து புரிந்தது.

இங்கே எதற்காக வந்தது.?

எழுந்து குளித்து உடைமாற்றி காலை உணவு முடித்து அலுவலகம் புறப்பட்டு செல்லும் வரை அது அங்கேயே தூங்கிக்கொண்டு இருந்தது.

வேலையாளிடம் சொல்லிவிட்டு புறப்பட்டுச் சென்றார்.

மாலை வந்து பார்க்கும் போது நாய் அங்கில்லை. விசாரிக்கும் போது மதியமே சென்று விட்டதாக வேலையாள் கூறினான்.

மறுநாள்காலை. மறுபடியும் அதே நேரம். அதே நாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போல் உள்ளே வந்து பழகியது போல் சற்று குலாவிவிட்டு அதே இடத்தில் தூங்கி விட்டது.

மாலை வந்து பார்க்கும் போது நாய் அங்கில்லை.

இச்சம்பவம் பல நாட்கள் தொடர்ந்தது. வேலையாளை விட்டுப் பின் தொடர்ந்தும் நாய் எங்கிருந்து வந்தது என்பதனைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஒருநாள் ஒரு துண்டு சீட்டில் விபரமாக எழுதிக் கழுத்தில் கட்டி அனுப்பினார்.

மறுநாள் அந்த நாய் வரும்போது கழுத்தில் வேறு ஒரு துண்டு சீட்டு இருந்தது.

படித்து விட்டு உருண்டு புரண்டு சிரிப்பதை பார்த்து வேலையாளுக்கு ஒன்றும் புரியவில்லை.

அப்படி என்ன தான் எழுதியிருந்தது?..

'அன்பு மிக்கவருக்கு வணக்கம். இந்த நாய் என்னுடையது தான். இது என்னுடைய வீட்டில் அதிகாலையில் எழுப்பப்படும் காட்டுக் கூச்சலால் விடிய விடிய தூங்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது. சில நாட்களாக காலை வேளைகளில் காணாமல் போய்க்கொண்டு இருந்தது.

தங்கள் கடிதம் மூலம் தங்கள் வீட்டில் அது நிம்மதியாக உறங்கி எழுந்து வருவது அறிந்து கொண்டேன். தங்களது அன்பிற்கு மிக்க நன்றி.

பி.கு: ஒரு விண்ணப்பம். நாளை முதல் நாயுடன் நானும் வரலாமா? நானும் நன்றாகத் தூங்கி பல ஆண்டுகள் ஆகின்றன.



*(மூலம்: இணையம்)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33. விமர்சனம்





மிருகங்களின்மீது கருணையே இல்லாதவர்கள் .. எப்படித்தான் ஒரு கழுதையில் இருவரும் பயணிக்க மனச்சாட்சி இடம்கொடுத்ததோ!






இரக்கமோ பாசமோ மரியாதையோ இல்லாத மகன்.. தந்தையை நடக்க விட்டுத், தான் சொகுசாக கழுதை மீது பயணம் செய்கின்றான்..




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சுயநலமுள்ள இரக்கமே இல்லாத
தந்தை.. மகனை நடக்கவைத்து விட்டு
சொகுசாகத் தான் கழுதையில்
இருந்து பயணம் செய்கின்றான்..






அறிவில்லாத தந்தையும் மகனும்..
கழுதையின் மீது எப்படிப் பயணிப்பது
என்று தெரியாமல் இருவரும்
நடந்து செல்கின்றார்கள்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**பைத்தியக்காரத் தந்தையும் மகனும் .. கழுதையில் தாம் ஏறிப் பயணம் செய்யாது கழுதையை இருவரும் சுமக்கிறார்கள்..**

- சமுதாயத்தில் ஒவ்வொரு செய்கைக்கும் ஒவ்வொருவரும் வெவ்வேறு விமர்சனம் கூறிக்கொண்டே இருப்பர்.
- ஒருபோதும் உங்களால் அனைவரையும் திருப்திப்படுத்த முடியாது.
- நீங்கள் எதைச் செய்தாலும் அதில் குறை கண்டுபிடிக்க ஒருவராவது இருப்பர்
- மற்றவர்களின் விமர்சனத்தைக் கணக்கில் எடுக்காது உங்களுக்குச் சரி எனத் தோன்றுவதையே செய்யுங்கள்.

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**




**மெய்ப்பொருள் காண்பது அறிவு**].*(அறிவுடைமை-423)*

[எந்தக் கருத்தை எவர் சொன்னாலும், அக்கருத்தின் உண்மையைக் காண்பதே அறிவு]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்டல்மண்

பல்லூடக தொடர்புச் சாதனங்களில்
படித்ததில் பிடித்த
சிறுவர் உள்ளங்களைச்
சிறப்பாகப் பண்படுத்தும்
சிந்தனைமிக்க
சிறுவர் நீதிக்கதைகள்...

தொலைத்தொடர்புப் பொறியியலாளர்...
கலைஞர்...
எழுத்தாளர்...
சிவனடியார்...
திருமுறைநெறிச் செல்வர்...
அகிலஇலங்கைச் சமாதான நீதவான்...
'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணரின்
தொகுப்பாக...



ISBN978-955-42626-5-2
ரூபா 250/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org